# திராவிடன்

ஆசிரியர்: என்.வி. நடராசன்.

மாலை : 9 28—10—55 : வெள்ளி : : விலை 3 அணா மலர் : 11


# தென் பகுதி இரயில்வேமென்

## யூனியனை, அரசியல் கட்சியிடம் அடகு வைக்க முயல்வது யார்?

S. R. M. U.

●

"விடுதலை" சென்னை 19-10-'55 வெளியூர் 20-10-55 இதழில் மத்திய சங்க நிர்வாகிகள் அறுவர் பேரில் வெளிவந்திருக்கும் அறிக்கையைப் பற்றி உண்மை நிலை என்ன என்பது பற்றி ரயில்வே தொழிலாளர்களும், பொது மக்களும் தெரிந்துகொள்ள கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுகிறேன்.

தென் பகுதி ரயில்வேமென் யூனியனின் கொள்கைகளில் சமுதாய முன்னேற்றத்திற்கு மூடப்பழக்க வழக்கங்களை அகற்ற உழைப்பது என்பது முக்கிய கொள்கையாகையால், சமுதாய முன்னேற்றத்திற்கே தன் வாழ் நாள் முழுவதும் உழைத்து வரும் பெரியார் அவர்கள் இந்த யூனியன் திறப்பு விழா சொற்பொழிவாற்ற வேண்டிக்கொள்ளப் பட்டார்கள், அவர்களும் இசைந்து யூனியனை திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார்கள். "திருக்குறளில் என் கருத்து இருக்கிறது அதனால் நான் அதை ஆதரிக்கிறேன்." என்று அய்யா சொல்லுவார்கள், அதேபோல் இந்த யூனியன் கொள்கைகளில் அவருடைய கொள்கைகள் இருப்பதால் இந்த யூனியன் வளர்ச்சிக்கு தன்னாலான உதவி செய்வதாகவாக்களித்து யூனியன் மாநாட்டிலும், பல பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய இதழாகிய விடுதலையிலும் யூனியன் நடவடிக்கைகளுக்கு நல்ல விளம்பரம் தந்தார்கள்.

ஆனால் இந்த யூனியனில் சிலர், அய்யா ஆதரவு கொடுப்பதை தவறாக புரிந்துகொண்டு இந்த யூனியனை திராவிட கழகத்தின் கிளையாக நடத்த வேண்டுமென்று சொல்லி அதற்கான முறையில் யூனியனை நடத்த ஆரம்பித்தார்கள். இதை நான் ஆதரிக்காத துடன் எதிர்க்கவும் செய்தேன். ஆகவே யூனியனில் உள்பூசல் யூனியன், ஆரம்பித்த சில மாதங்களிலேயே ஆரம்பித்து விட்டது. யூனியன் ஆரம்பத்தில் கூட்டு பொதுச்செயலாளராக இருந்த தோழர் வை. இராமச்சந்திரன் "பெரியார் சுயமரியாதை இயக்க ஸ்தாபனத்தின் டிரஸ்ட் மெம்பர்களில் ஒருவராக இருந்தார்.

ஆகவே 1953 செப்டம்பர் மாதம் 25, 26, 27 தேதிகளில் நடந்த மாநாட்டின் செயலாளராகவும் இருந்தார். மாநாட்டிற்குத் தலைவர்களை அழைப்பதில் அவர் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களை அழைக்க மறுத்து விட்டதாலும், இந்த யூனியனை வெறும் பிரசார ஸ்தாபனமாக நடத்த வேண்டுமென்று சொன்னதாலும், அதை ஒத்துக் கொள்ளமுடியாத நான் 16-8-53ல் நடக்க இருந்த நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என்று சொல்லி என் தலைமைப் பதவியை ராஜினாமா செய்வதாக கடிதம் எழுதி விட்டேன்.

உடனே இப்பொழுது கூட்டுப் பொதுச் செயலாளராக இருக்கும் தோழர் எ. கே சச்சிதானந்தம் அவர்களும் கிளைசெயலாளர்களுக்குக் கடிதம் எழுதி கொண்டுவரும் மத்திய குழு உறுப்பினரான தோழர் சி. ஆளவந்தார் அவர்களும் என்னை வந்து வேண்டி கூட்டத்திற்கு வரும்படி அழைத்தார்கள், பிரார்த்தனைகளும் வைத்தார்கள், கடிதமும் எழுதினார்கள், நானும் கலந்துகொள்ள இசைந்தேன், பின்னர் தோழர் வை. இராமச்சந்திரன் அவர்கள் விலகிக் கொண்டமையால் தொடர்ந்து தலைமைப் பதவிவகிக்க ஒப்புக்கொண்டேன்,

தோழர் இராமச்சந்திரன் விலகியும் நிலைமை மாறவில்லை. அவர் கையாண்ட கொள்கைகளை தோழர் சச்சிதானந்தம் அவர்கள் சற்று தந்திரமாக கையாள ஆரம்பித்தார்! தோழர் இராமச்சந்திரன் இருந்த பொழுதாவது திருவாளர்கள் என். வி. நடராசன், எ. வி. பி. ஆசைத்தம்பி, எ. கோவிந்தசாமி, எம். எல். எ. கோவை செழியன் போன்ற தலைவர்களைக் கூட்டத்திற்கு அழைக்க ஒப்புக்கொண்டார், அவர்கள் பேசிய கூட்டத்தில் பேசவும் செய்தார், ஆனால் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் கூட்டுப் பொதுச்செயலாளர் பொறுப்பு ஏற்றபின் திராவிட கழக தலைவர்கள் அல்லது கழகத்தை ஆதரிக்கிறவர்கள் என்பவர்களைத் தவிர மற்றவர்களை கூப்பிட மறுத்து விட்டார். எனவே எனக்கும் கூட்டுப் பொதுச்செயலாளருக்கும் போராட்டம் (Coldwar) ஆரம்பமாயிற்று, தொடர்ந்து நடைபெற்றும் வருகிறது.

ஆகவே இன்று 'S. R. M. U. வை அடகுவைக்கமுயன்ற சதிதிட்டம்கண்டு பிடிக்கப்பட்டது" "மத்திய சங்க தலைவரின் மீது நம்பிக்கை இல்லை." "பொன்மலை தொழிலாளர்கள் இதை அறிந்து வீரிட்டு எழுந்து இந்த சதி செயலை முறியடிக்க முற்பட்டுவிட்டார்கள்" 'ஆ' 'ஊ' என்றெல்லாம் கூப்பாடு போட ஆரம்பித்திருப்பதானது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி யூனியனில் ஆதிக்கம்செலுத்தவிடவேண்டும் என்ற கொள்கையை நான் முழு மூச்சாக எதிர்ப்பதின் விளைவேயாகும்.

மேலும் தற்சமயம் இது உச்ச நிலையை அடைந்ததற்கு காரணம் பெரியார் பிறந்த தின விழாவை S R M U சார்பாக சகல கிளைகளும் கொண்டாட வேண்டுமென்று கூட்டுப் பொது செயலாளர் அனுப்பிய அறிக்கையை நான் ஏற்றுக்கொள்ள முடியாமற் போனதே ஆகும்; அறிக்கை என்னையோ பொது செயலாளர் திரு வ. வீராசாமி M P அவர்களையோ கலந்து வெளியிடப்படவுமில்லை.

பொன்மலையை பொறுத்த மட்டில் அங்குள்ள திராவிட வாலிபர் கழகத்தவர்கள்தான் பொன்மலை கிளையை நடத்துகிறவர்கள். ஆகையால் அவர்கள் தங்கள் தாய்க்கழகத்திற்கு மாறுபட்ட கருத்து உடையவர்களை அங்கத்தினர்களாக சேர்ப்பதுமில்லை, ஒருவர் இருவர் சேர்ந்தாலும் அவர்கள் விருப்பப்படி மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை பொதுக்கூட்டங்களுக்கு கூப்பிடுவதுமில்லை, இதே நிலைமை திருச்சிக் கிளையிலும், பெரம்பூர் கிளையிலும் உள்ளது

சமீபத்தில் பெரம்பூர்–சென்னை கிளை சார்பாக செங்கையில் நடந்த மாநாட்டில் திரு. எ. கோவிந்தசாமிஎம்.எல்.எ. பேசுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தும், பிறகு பெரம்பூர் கிளையின் பிடிவாதத்தால் அவர் அழைக்கப்படாமல் பெரியார், திராவிட கழக முக்கியஸ்தர்கள் மட்டும் அழைக்கப்பட்டார்கள். இதை நான் கண்டித்து எழுதியும் மாநாட்டில் பேசியும்உள்ளேன். இந்தப் போக்கை நாளடைவில் அவர்கள் மாற்றிக் கொள்வார்கள் என்று எண்ணி இதுநாள்வரை அவர்களுக்கு நான் விட்டுக் கொடுத்தும் வந்தேன், ஆனால்நான் எதிர்பார்த்தபடி அவர்கள் திருந்தவில்லையாகையால் அவர்களை நான் கண்டிக்கவேண்டி ஏற்பட்டது. எனவே உடனே அவர்கள் என்னை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள்,

இப்பேர்பட்டவர்களுடைய போக்கினால் யூனியனுடைய அங்கத்தினர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது, Suspension benefit fund, Sick benefit fund, legal assistance fund. போன்ற பலவகை சகாயங்களை செய்ய அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கவேண்டுமென்று திருவண்ணாமலையில் 25...5 ...55ல் நடந்த C. E C கூட்டத்தில் அறிவித்தேன். பதினாறு அம்சங்கள் கொண்ட கோரிக்கைகளை நானே தொகுத்து அவைகள் நிறைவேற உழைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டுவந்து அனைவரும் எழுந்து உறுதி கூறும்படி சொன்னேன். அதேபோல் உறுதி மொழி வாங்கப்பட்டது.

மேற்கண்டவைகளை நிறைவேற்ற வேண்டுமானால் யூனியன் கொள்கைகளை ஒத்துக் கொள்கிறவர்களை பல்லாயிரக் கணக்கில் சேர்க்க முயற்சிக்கவேண்டுமென்றும் 'அய்யா' கொடுக்கும் ஆதரவுடன் மற்றவர்களும் கொடுக்கும் ஆதரவைப்பெற்றால் யூனியன் வளர்ச்சிக்கு மிகவும் பலனளிக்குமென்றும் 1-9-55 பொன்மலையில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் பேசினேன். இந்த கருத்தை யூனியன் ஆரம்பித்த காலத்திலிருந்தே சொல்லிவருவதால் பலரால் கண்டிக்கப் பட்டுள்ளேன். இதற்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் உள்ளன,

யூனியனில் எந்த அரசியல் கட்சியும் ஆதிக்கம் செலுத்தவிடக்கூடாதென்று நான் சொல்லுவதாலும் "திராவிடக் கழகத்தின் பொக்கிஷமாக" மட்டுமல்லாமல் "யூனியன் கொள்கைகளை ஆதரிக்கிறவர்களின் பொக்கிஷமாக" இருக்கவேண்டுமென்று சொல்லுவதாலும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சித் தலைவர்களை (யூனியன் கொள்கையை ஆதரித்தும்) கூட்டங்களுக்கு கூப்பிட மறுப்பதை கண்டிப்பதாலும் என்மீது பழி சுமத்தப்படுகிறது.

யூனியனின் கொள்கையை ஒத்துக் கொள்ளுகிற அனைவர்களுடைய ஆதரவையும் தேடவேண்டுமென்று சொல்லுகின்ற நான், யூனியனை அரசியல் கட்சியிடம் அடகுவைக்க முயலுகிறவனா? இந்த யூனியனில் திராவிடக் கழகத்தவர் அல்லாதவர்களுக்கு இடமில்லை என்று சொல்லி எதற்கெடுத்தாலும் திராவிடகழக தலைவர்களையேஅழைத்து கூட்டம்போட்டு இதுவும் திராவிடகழகமே என்பவர்கள் அரசியல் கட்சியிடம் அடகு வைக்கிறார்களா என்பதைமுடிவு கட்ட பொதுமக்கள்–ரயில்வேத்தொழிலாளர்கள் ஆகியவர்களின் தீர்ப்புக்கு இவ்விளக்கத்தை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

அன்பன்,

**சி. இராகவானந்தம்**

●

# "திராவிடஸ்தான்" இயக்கம்

ஆங்கிலம் : கே. ஆர். மல்கானி — தமிழில் : திருவேடம்

[டில்லியிலிருந்து வெளிவரும் ஆங்கில வார வெளியீடு "தாட்" ('Thought') 15-10-55 தேதியிட்ட இதழில் காணப்படும் 'The Movement for 'Dravidastan' என்ற கட்டுரையின் மொழி பெயர்ப்பு]

●

**கருத்துக்கள் ஆசிரியரின் (கே. ஆர். மல்கானி) சொந்தக் கருத்தாகும்.**

●

தென் கோடியில், சென்னையில், ஒரு பிரச்னை நிலவுகிறது. அப்பிரச்னையை மற்ற இந்திய வட்டாரங்கள் அவ்வளவாகப் புரிந்து கொண்டதாகத் தோன்றவில்லை. அப்பிரச்னையை எழுப்பியது திராவிட கழகம். பத்திரிகை உலகம் அப்பிரச்னையைப் பற்றி ஒன்றுங் கூருது மௌனியாக இருந்தே அதைக் கல்லி எறிந்து விடலாமென்று நம்புகிறது. பிரதமர் நேரு எப்போதாகிலும் சென்னை செல்ல நேர்ந்தால் அப்போதெல்லாம் அப்பிரச்சினை குறித்து வடி கட்டிய மடத்தனம் (Fantastic nonsense) என்று கூறிவிட்டுத் திரும்பி விடுகிருர். அச்சுடு சொல் தாளாத மக்கள் கொதிப்புற்று கிளர்ந்தெழுகிருர்கள். இன்று தென்னுடு அதனுல் பெருங் கொந்தளிப்பில் உள்ளது.

மட்டைக்குக் கீற்று இரண்டு என்றபடி, ஆரியர் வேறு, திராவிடர் வேறு வேறுதான் எனக் கூறுகிறது கழகம். திராவிடர்களை ஆரியர் வஞ்சித்து வீழ்த்தினுர்கள் என்று கூறுவதே இராமாயணம். (இக்கூற்றை நேரு போன்ற "சரித்திர வல்லுநர்களே" ஆதரிக்கிருர்கள்). இந்திய ஆட்சி "லகானை" கையில் கொண்டு வடவர்களாகிய ஆரியர், தென்னவர்களான திராவிடர்களைச் 'சவாரி' ஏறுகிருர்கள். தென்னுட்டுப் பார்ப்பனர்களும் ஆரியர்களாதலால் அவர்களும் வடநாட்டு ஆரியனுக்குக் 'கங்காணி' வேலை செய்து திராவிடரைக் காட்டிக் கொடுக்கிருாகள். தெற்கே இந்தியைத் திணிப்பது ஆரிய ஆணவமே.

எனவே, 1,25,000 சதுர மைல் பரப்புள்ளதும், 1,500 மைல் நீளமுள்ள கடற்கரை கொண்டதுமான தென்னகத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் மொழிகளைப் பேசும் ஆறு கோடி மக்களுக்கென்று ஒரு தனி சமதர்மக் குடியரசு நாடு—திராவிடக் கூட்டாட்சி நாடு—கிடைத்தாலொழிய திராவிடர்களுக்கு விமோசன மில்லை என்றெல்லாம் கூறுகிறது கழகம். தென்னிந்தியாவிற்கு அப்பாலுள்ளவர்களுக்கு இவையெல்லாம் "விளையாடடுத் தனமா"கத்தான் தோன்றும். ஆனுல் தென்னகம் உள்ளுக்குள்ளாகவே குமுறுகிறது. அக்குமுறலை பலம் வாய்ந்த பத்திரிகை உலகமும், மாற்றுக் கட்சிகளும் திரையிட்டு இருட்டடிப்பு செய்கின்றன. இந்தியாவில் உள்ள அரசியல் அறிவு படைத்த அத்தனை பெயர்களும், திராவிட இயக்கம் ஏன் எதற்காக எப்போது தோன்றியது? அதன் அடிப்படை கோரிக்கைகள் என்னென்ன? அவை நியாயமானவையா? அல்லனவா? சரித்திரச்சம்பவங்களுக்கு ஒத்து வருகின்றனவா? முரன்படுகின்றனவா? மாயா ஜாலப்புரட்டா? அன்று உண்மை வடிவினதா? என்பனவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, இன்று இந்தியாவையே ஒரு குலுக்கு குலுக்கும் 'திராவிட நாட்டுப் பிரச்னையில்' ஒரு முடிவு கண்டு அதன்படி ஒழுகுவதே நேர்மையாகும்.

தெற்கே பார்ப்பனர்கள் எண்ணிக்கை நூற்றுக்கு ஒருவர்தான் ஆனுல் அவர்களுக்குள் இருக்கும் இனப்பற்று உணர்வாலும், கல்வி முதிர்ச்சியினுலும், அரசாங்க உத்தியோகங்களத்தனையும் 'சுவீகாரம்' பண்ணிக் கொண்டு ஏகபோக உரிமை கொண்டாடுபவர்களானுர்கள். கடந்த முப்பதாண்டு காலமாக அந்த நிலைமையேதான். அந்த நிலையைப் பார்ப்பனர் அல்லாதாராகிய செட்டி, ரெட்டி, நாயுடு, நாயர், நாயக்கர், நாடார் வகுப்பினர்கள் எதிர்த்துப் போராடியே வந்தார்கள். திராவிடர்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள். அவர்களே இந்நாட்டிற்குச் சொந்தமானவர்கள்—என்பது சில ஆங்கில ஆராய்ச்சியாளர்கள்களின் முடிபும் ஆகும். அம்முடிடைக் கொண்டே, இன்றைய திராவிடர்கள், தம் நாட்டை மீட்கும் உரிமை உணர்வு கொள்கிருர்கள்.

1915-ம் ஆண்டில் டாக்டர் நடேச முதலியார் "திராவிடர் இல்லம்" என்ற விடுதியைத் தோற்றுவித்தார். திராவிட நாட்டில் பார்ப்பனர் அல்லாதவர்கள் மேல் படிப்புப் படிக்க உதவுவதே அவ்வில்லத்தின் குறிக்கோள். அரசியல் துறையில் திராவிடர்களுக்கு முன்னேற்றம் தேவை என்ற சீரிய நோக்குடனே 1916-ல் திராவிடச் சங்கம் (Dravidian Association) கண்டார் அச்சங்கத்தின் இலட்சியம் "திராவிட நாடு" அடைவதே! அதற்குப்பிறகு டாக்டர். டி. எம். நாயர் அவர்களும், சர். பி. தியாகராய செட்டியார் அவர்களுமாகச் சேர்ந்து தென் இந்திய நல உரிமைச் சங்கம் தோற்று வித்தார்கள். அதுவே நீதிக்கட்சி என புகழ் பெற்று ஓங்கியது அதன் இலட்சியமும் தென்னிந்தியர்களுக்கென தனி ஆட்சி வேண்டும், அதோடு திராவிடர்களுக்குச் சம நீதியுங் கிடைக்க வேண்டுமென்பதே.

## சுயமரியாதை இயக்கம் :

1920—1930 வரை திராவிட நாட்டில் காங்கிரஸ் துளிர்விட வில்லை. 1921-ல் மாண்ட்போர்டு சீர்திருத்தங்களை (Montford Reforms) ஏற்றுக் கொண்டு நீதிக்கட்சி ஆட்சிபீடமேறியது. அரசாங்க உத்தியோகத்தில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருந்த பார்ப்பனர்களை எவ்வளவுக்கெவ்வளவு பிய்த்து எறிய முடியமோ அவ்வளவும் செய்தது நீதிக்கட்சி. 1926 வரை நீதிக்கட்சி ஆட்சிப்பிடியை விடாதிருந்தது. இந்திய விடுதலை கிதத்தோடு காங்கிரஸ் துளிர்க்க ஆரம்பித்தது, நீதிக்கட்சியாளர்கள் வெள்ளையரைத் தாங்கியே நின்ருர்கள். அது ஒரு பெரிய காரணமாய் அமைந்தது அவர்களை வீழ்த்த. நீதிக்கட்சி கலகலத்தது. ஆனுல் காங்கிரஸ்காரர்களிடையே பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்ற பேதமும் நுழைந்துவிட்டது. அதன் காரணமாக சேலம் டாக்டர் பி. வரதராஜலு நாயுடு காங்கிரசை விட்டுப் பிரிந்து இந்து மகாசபையில் நுழைந்தார். மீண்டும் மூன்ருண்டுகளுக்குப் பிறகு காங்கிரசில் வந்து சேர்ந்து விட்டர்.

ஈரோடு திரு ஈ. வெ. ராமசாமி நாய்க்கர், திராவிடத்தின் தலைக்குரலொலி, காங்கிரசிற்கு முழுக்கு போட்டுவிட்டு நீதிக் கட்சியில் சேர்ந்தார். அவர்கள் இருவரும் ஆதியில் நீதிக்கட்சிக்கு எவ்வளவு தொந்தரவு கொடுக்க முடியுமோ அவ்வளவுங் கொடுத்தார்கள். அப்போது நீதிக்கட்சியை வெள்ளையன் அடிவருடி எனத் தூற்றினுர்கள்,

நாயக்கருக்கு அரசியல் நடவடிக்கைகள் திருப்தி யளிக்கவில்லை, சாதிக்குச் சாவு மணிஅடித்து, சமூக சீர்திருத்தத்தை உண்டு பண்ண வேண்டுமென்ற ஆழ்ந்த சிந்தனையும் நீங்காப்பற்றும் உடையவர் அவர். அவ்வண்ணமே 1926-ல் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். மணவினை, பிணவினைகளுக்கு பார்ப்பனர்களை நுழைய விடாது விரட்டியடித்தார். புரோகிதனற்றத் திருமணம், அவர் உழைப்பால் எண்ணிலடங்காது பெருகின.

1936-ல் காங்கிரஸ், ஆட்சிப்பொறுப்பு ஏற்றது. சென்னை மாகாணத்தில் திரு. சி. ராசகோபாலாச்சாரி, பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கினுர். ஈ. வெ. ரா. (இப்படி பெரும் பாலோரால் பிரியமுடன் குறிக்கப்படுபவர்) விடமிருந்து கடும் எதிர்ப்பு தோன்றியது. இந்தி எதிர்ப்புக் குற்றத்திற்காக 1938-ல் அவர் சிறை ஏகினுர் அவரைத் தொடர்ந்து ஆயிரமாயிரம் தொண்டர்கள் சிறை சென்றனர். அதே ஆண்டு ஈ. வெ. ரா. நீதிக் கட்சியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். ஜெயிலிலிருந்து தயாரித்த அவரது தலைமை உரையை, அவருக்குப் பதிலாக வாசிக்கப் பட்டதில், திராவிட நாடு திராவிடர்க்கே என்ற கோரிக்கை வலியுறுத்தப் பட்டிருந்தது.

அதற்கடுத்த ஆண்டு காஞ்சிபுரத்தில் கூடிய மாநாட்டில் திராவிடநாடு பிரிவினை கோரிக்கை சீர்தூக்கப் பட்டது. அம்மாநாட்டிற்கு ஒரு மலையாளி தலைமை வகித்தார். அவரே திரு. சி. ஜி. நெட்டோ. 1940—அவ்வாண்டில்தான் பாகிஸ்தான் பிரிவினைத் தீர்மானம் முஸ்லிம் லீகால், லாகூரில் நிறைவேறியது. அதே ஆண்டு (1940-ல்) திருவாரூரில் மாநாடொன்று நடந்தது. அம்மாநாட்டிலும் மீண்டும் திராவிட நாட்டுப் பிரிவினை தீர்மானம் போட்டு பிரிவினையைக் கோரிற்று. சாதிசமய மற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென உழைக்கும் ஈ. வே. ரா. 1938-லேயே "நாயக்கர்" என்ற தம் சாதிப்பட்டத்தை உதறி விட்டார். அதே ஆண்டு தாய்மார் கழகம் அவருக்குப் "பெரியார்" (மூத்தோர்) என்ற பட்டத்தைவழங்கிற்று. அப்பெயரே இன்று சிறப்புற்று எங்கிலும் யாவராலும் வழங்குகிறது.

வசீகரத் தோற்றமும், ஆளுமையும் உடையவர் பெரியார். அவர் ஒரு யூத குருவைப்போல் தோற்றமளிக்கிருர். கொள்கையில் அவர் ஒரு ஜனநாயகவாதி. திட்டத்தில் திட்ட அமலில் அவர் ஒரு எதேச்சதிகாரவாதி. எண்ணத்தில் அவர் சமதர்ம நோக்குடையவர். செயலில் "சீமான் போக்கு!" கோயமுத்தூர், மதுரை முதலிய ஊர்களில் உள்ள மில் முதலாளிகள் அவரை (பெரியாரை)த் தாங்குகிருர்கள் என்பது ஒரு சாரார் கூற்று. அம்முதலாளிகள் பெரியாரை நம்புவதற்குக் காரணம், பெரியாரைக் கொண்டுதான் அவர்களால் பிர்லாக்களையும், டால்மியாக்களையும், கோயங்காக்களையும் ஒரு கை பார்க்கலாம் என்ற ஒரு பித்தே.

1944-ம் ஆண்டு நீதிக்கட்சி திராவிட கழகமாக ஆக்கப்பட்டது. ஈ. வெ. ரா. கோரும் திராவிடநாடு சமதர்மக் குடியரசு—கூட்டாட்சியாகத் துலங்கும். ஆங்கே சாதிபேதம் நிர்மூலமாக்கப்படும். ஈ.வெ.ரா. வின் இத்தகு குறிக்கோள்களால் ஈர்க்கப்பட்ட இளங்காளைகள், திறமை வீரர்கள் சி. என். அண்ணுதுரை, நெடுஞ்செழியன், அன்பழகன், ஈ. வி. கே. சம்பத், மதியழகன், என். வி. நடராசன், எம். கருணுநிதி போன்ற பல்லோர். ஆனுல் 1949-ம் ஆண்டிலே ஈ. வெ. ரா, தமது 70-வது வயதில் 30 வயதுடைய மணி அம்மையாரை—வளர்ப்புப் பெண்போல் வளர்த்து வந்தவரை—மணந்து கொண்டார். அதன் விளைவாக திராவிட கழகம் இரண்டுபட்டது.

# ஓடக்காரா!

அவள் :

ஓடக்காரா! ஓ! ஓ! ஓடக்காரா!
ஓடத்தை எங்கோட்டிச் செல்வாய்?

அவன் :

கன்னிப் பெண்ணே! தமிழ்க் கன்னிப் [பெண்ணே!
காற்றின் வழியோட்டிச் செல்வேன்,

காற்றின் வழியிலே செல்ல—நீ
காரியமாற்றுதல் ஏனோ?

காற்றின் வழியில் சென்ருலும்—கலம்
கவிழாது காக்க வேண்டாமோ?

பாய்மரந் தன்னிலே காற்றை—இது
பண்பாக ஏந்தி ஓடுது பார்!

நெஞ்சகந் தன்னிலே காதல்—தன்னை
நிறைத்து நீ ஓடுதல் பார்த்தேன்!

நீரிலே தாவி இவ்வோடம்—ஐயா
நேராக முன்னேறல் பாராய்!

சமுதாயக் கட்டுக்கள் எல்லாம்—தாவி
சரியாக நீ செல்லல் பார்த்தேன்!

யாரை நினைந்தே இவ்வோடம்—இப்போ
எவ்விடம் நோக்கியே ஓடும்?

காதலன் நினைவால் இப்பேதை—இப்போ
மோதிக்கரை நோக்கி ஓடும்!

காட்டாற்று வெள்ளத்தில் ஓடம்-இன்பப்
பாட்டொன்று பாடுவதேனோ?

கண்ணுன காதலனைக் காண-பெண்ணேநீ
பண்பாடிக் கொண்டு வரவில்லையா!.

இசைபாடி ஓடிடும் ஓடம்—பின்னே
அசைந்தாடிச் செல்வதும் ஏனோ?

அன்பின் அலைகளில் ஆடும்—அதன்
இன்பத்தின் கூத்தடி பெண்ணே!

அலைகள் தாம் ஏன் பிறந்தனவோ?—இந்த
ஓடத்தை ஆட்டுகின்றனவே!

காதலின் காற்றில் பிறந்த—அலைகள்
மோதி உனையாட்ட வில்லையா!

ஆடியும் அலுப்பறியாமல்—ஓடம்
அழகாகச் செல்வதெவ்வாறோ?

தேடும் இன்பக்கரை கிட்டும்—என்ருல்
ஆடும் அலுப்பறிவாயோ?

சுமைகளின் துன்பம் தோன்ருமல்—இது
அமைதியாய்ச் செல்வதெப்படியோ?

காதல்சுமையொரு சுமையோ?-பெண்ணே
களிப்பின்ப மன்ருேடி கண்ணே!

வண்டி தன்னைச் சுமந்தோடும்—தரையில்
வண்டி சுமந்திடும் ஓடம்!

(நெஞ்சில்) காதலனைச் சுமந்தோடும்
அங்கே அவன் சுமப்பானே! [—உன்னை

வேடிக்கைகள் போதும்! போதும்!-இனிப்
பாட்டை நிறுத்திக் கொள் தோழா!

காணும் கரையை நெருங்க—உன்னில்
நாணம் நிறைந்ததோ பெண்ணே!

ஓடக்காரா! ஓ! ஓ! ஓடக்காரா!
ஓடத்தை ஓட்டியே செல்வாய்!

●

பூவை. மணி

# நினைவில் கொள்க!

●

புரோகிதர் காமக் குரோதங்களுடையவர். புரோகிதர், தம் நலங்கருதி, மக்களை அறியாமையில் அழுத்தி, மூடப் பழக்க வழக்கங்களையும், வெற்றுச் சம்பிரதாயம் முதலிய கட்டுகளையும், பிற போலிகளையும், அவரிடைப் பெருக்கிக்கொண்டிருப்பர்.

*

புரோகிதர்கட்குக் காசு கொடுத்து உபதேசம் பெறுவதால் தெய்வ நிலை கூடு மென்று கருதுவது அறியாமை.

*

புரோகிதர் உபதேசம் குருடருக்குக் குருடர் வழி காட்டுவதைப் போன்றது.

*

மேல் நாடு அரசியல் வெறியால் கெடுகிறது. கீழ்நாடு மத வெறியால் கெட்டது. அங்கே அவ் வெறியும், இங்கே இவ்வெறியும் தணிதல் வேண்டும். வெறியைத் தணிக்க வல்ல மருந்து சன்மார்க்கமேயாகும்.

*

கர்மம், நாள், கோள் முதலியவற்றின் மீது எந்நேரமும் கருத்தை இருத்தித் துன்புறுவது மடமை.

—திரு. வி. க.

○

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, விடாப் பிடிவாதத்தை வீழ்த்தும் வலிமை வாய்ந்தது. அதோடு, உடன் தனது தவறை ஒப்புக் கொள்ளுங் குணத்தை மிஞ்சக் கூடிய நேர்மைக் குணம் வேறெதுவுமில்லை.

— பேர்ள் பக் அம்மையார்.

இத்திருமணம் சீர்திருத்த நோக்கிற்கே முற்றிலும் முரணுனது எனக் கண்டித்து வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினுர் சி. என். அண்ணுதுரை. ஈ. வெ. ரா.வின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிக்கும் உச்சநிலையே முன்னேற்றக் கழகம். எப்படியிருப்பினும் இரு கழகங்களுக்கும் கொள்கை ஒன்றே.

தி. மு. க.வினர் பார்ப்பனர்களை விரட்ட வேண்டுமென்ற வெறி சற்று தளர்ந்தவர்கள். பிறப்பால் உயர்ந்தோன் என்ற சாதிச் செருக்கையும், சாதிச் சின்னங்களையும் நீக்கி ஒதுக்கிவிட்டு மனிதனுக வரும் 'பார்ப்பனர்' களுக்குத் தி. மு. க.வில் இடம் உண்டு என்ற மனப்பாங்கு உள்ளது தி. மு. க. இரண்டரை லட்சம் உறுப்பினர்கள் கொண்டது தி. மு. க. ஆயினும் மக்கட் கடலில் பெரியாருக்கு குறையில்லா நிறை செல்வாக்கு இருக்கவே செய்கிறது. அவர் (பெரியார்) சி. ஆர்.ஐ விட பெருமக்கட் கூட்டத்தை சேர்த்து விடுவார்! அவரது கொடி கருப்பு; மத்தியில் சிகப்பு. கருப்பு இழிவைக் குறிக்கும்; சிகப்பு இழிவைப் போக்கும் தியாகப் பணியைக் குறிக்கும்.

இந்தியாவிற்குச் சுதந்தரம் வந்தநாளை அதாவது ஆகஸ்டு 15-ஐ துக்க நாளாகக் கொண்டாடினுர். வெள்ளையன் போய் தவுட்டு நிறப்பார்ப்பனன் வந்தான். அவ்வளவுதான். இதில் சுதந்தரம் என்ன வாழ்கிறது என்ருர். பவனகர் மகாராஜா சென்னை கவர்னராக வந்த போது, அவருக்குப் கருப்புக் கொடி காட்டப்பட்டது. காரணம் அவரும் ஓர் ஆரியரெனப்பட்டார். 1950-ல் வடநாட்டான் கடைகளின் முன் மறியல் நடந்தது இதன் விளைவு வடநாட்டு மார்வாரிகளும், குஜராத்திகளும், சென்னையில் பற்பல இடங்களில் பள்ளிகள்,' வைத்திய சாலைகள் முதலியவைகள் திறந்து நடத்தப் பொருளுதவி செய்ய முன் வந்தார்கள் ரயில் நிலையங்களின் பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்து இந்தியின் மீதுள்ள வெறுப்பைக் காட்டினது பிரசித்தம்.

அதன் பிறகு ஈ. வே. ரா. பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தை பல எதிர்ப்புகளுக்கிடையே நிகழ்த்தினுர்.

சி. ஆர். கொண்டுவந்த ஆரம்பக் கல்வி திட்டத்தைத் தகர்த்தெறிந்தார். நாடார் ஆட்சி ஏற்றதை ஆதரித்தார்,

இன்று இயக்கப் பிரச்சாரம் பலமாக நடந்து வருகிறது; சினிமாத் துறையை கூட பிடித்து விட்டார்கள். இன்றைய நிலையில் தம்மைத் தட்டிக் கேட்பார் இல்லை என்ற முறையில் முரணுன கருத்துக்களையும் பரவ விடுகிருர்கள். பிரதமர் ஜவகர்லால் நேரு "முட்டாள்தனம்" "முட்டாள்தனம்" என்று மேம்போக்காகக் கூறிவிட்டால் போதாது. அவர்களுக்குற்ற சில நியாயமான குறைகளை நீக்க முற்பட வேண்டும். பிறகு இந்திய மக்கள் ஆதியில் எப்படியிருந்தாலும், இன்று இனத்தால் யாவரும் ஒன்றிப் போனவர்கள் மாதிரியேதான் என விளங்க வைத்து இன்றைய நிலை ஆரியரும் திராவிடரும் ஒன்றே என்ற முடிவை ஏற்குமாறு சமாதானப் படுத்தி இந்தியாவின் ஐக்கியத்தையும் மேன்மையையும் உயர்த்த பாடுபட வேண்டும்.

### திருவள்ளுவர் கலா மன்றம்

பம்பாய் தி வ. கலா மன்ற உறுப்பினர் கூட்டம் 16—10—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு தாராவி, ரகீம் சேட்சால் பின்புறமுள்ள பந்தலில் தோழர் யு. எஸ் செல்லையா தலைமையில் தோழர் அ சாம்ராஜ் இன்னிசையுடன் தொடங்கியது.

கடந்தக் கூட்ட நிகழ்ச்சிகளும் கடிதப் போக்குவரத்துகளும் செயலாளர் உ. அ. செல்லையாவால் வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. நடக்கவிருக்கும் 'காதல் பசி' பலிபீடம் நோக்கி நாடகப் பயிற்சியாளராக தோழர் எஸ். எம். தேவராசன் அவர்களும் பாடல் இயற்றுபவராக பாவலர் பாலையா அவர்களும் பின்னணி இசைமுரசு, சிவ சண்முகநாதனும், விளம்பர உறுப்பினர்களாக ஏ. பி. குமார், ஆ. அப்பாதுரை இ. எம். இராமையா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பல முக்கிய பிரச்சினை குறித்து முடிவெடுக்கப்பட்டு செயலாளர் நன்றி நவில கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது கலைவுற்றது.

### ஆமதாபாத் முத்தமிழ் நாடக மன்றம்

16—10—55-ல் ஜமால்பூர் பணிமனையில் காலை 10-30 மணிக்கு சு. நரசிம்மன் முன்னிலையில் முத்தமிழ் நாடக மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது முத்தமிழ் நாடக மன்ற பயிற்சியாளர் சு. நரசிம்மன், எஸ். எஸ். தென்னரசு எழுதிய 'அத்தான்' என்ற நாடக பாகங்களை நாடக நடிகர்களுக்கு அறிவித்தார்.

குறிப்பு : நாடக தோழர்கள் தினசரி 16—10—55 லிருந்து மாலை 5 லிருந்து 7 மணிவரை ஜமால்பூர் பணிமனையில் பயிற்சி அளிக்கப்படும்; மாலை 5 லிருந்து 6-30 மணிவரை இசைவிருந்து அளிக்கப்படும்,

அன்பன், கயிலை தாசன்
முத்தமிழ் நாடக மன்ற செயலாளர்




## 11

**(காட்சி—25—ன் தொடர்ச்சி)**

*நிழல்:—* காதல் மூச்சுவிடும் ஒரு பூங்கொடியின் வாழ்வு உன் கரத்திலிருக்கிறது!

*மூர்த்தி:—* நஞ்சு தந்துவிட்டாளே அவள்!

(ஓசைபடாமல் மூர்த்திக்குப் பின்புறமாக ஆடி அசைந்து வந்த வள்ளி......மூர்த்தியின் சோர்ந்து போன விழிகளை மலர்க் கரங்களால் மறைத்துக்கொண்டே......

**வள்ளி:** நஞ்சு தந்துவிட்டாளா? யார் அந்தக் கொடியவள்? கூறுங்கள் அன்பரே! ...... என் நெஞ்சத்துச் சித்திரத்துக்கு நஞ்சு வைத்தவள்யார்? பேசமாட்டீரா? ......இதோ இந்த இதயம் துடி துடிப்பதைப் பாருங்கள்.

(மூர்த்தியின் கரங்களை முல்லைச் சிரிப்பழகி மலர்க்கரங்களுக் குள்ளே சிறை பிடிக்கிருள். மூர்த்தியோ போராடி விடுவித்துக் கொண்டு......!

*மூர்த்தி:* வேதனையான நேரம் எனக்கு! நீவேறு தொல்லையாகி விட்டாயா? போய்விடு வள்ளி-போய்விடு!

*வள்ளி:* தொல்லை எனக்குதான் ......முள்ளை எடுத்து விடுங்களென்ருல்......

*மூர்த்தி:* முள்ளா......எங்கே? நன்ருகத்தானே நின்று கொண்டிருக்கிருய்!

**வள்ளி;** முள் காலிலல்ல,...... இதோ இதயத்தில்......

*மூர்த்தி:* அதற்கு நான் தயாரில்லை!

**வள்ளி:** உங்களைத்தான் நாடி வந்தேன். நம்பிவந்தவளைத்திரும்பிப் பார்க்க மறுக்கிறீர்களே! குயில் கூவுகிறது...... அதைக் கேட்க மறுத்து கோட்டானைத் தேடி அலைகிறீர்களே! மாட மாளிகையின் மலர்விரித்த மஞ்சத்துக்கு அழைக்கிறேன் ...... நீங்களோ குப்பைமேட்டைத் தேடிப்பிடித்து அங்கே துயிலுவதுதான் வாழ்வின் இன்பம் என்று கருதுகிறீர்கள்.

*மூர்த்தி:* நான் எதையும் தேடவில்லை, அப்படித் தேடிப்பிடிக்கும் ஆசையெல்லாம் தகர்ந்து விட்டது.

**வள்ளி:** என்னிடம் சாவுஇருக்கிறது-உங்களிடம் வாழ்வு இருக்கிறது? சாகவா...—வாழவா?

**மூர்த்தி:** நீ ஏன் சாகிருய்?

**வள்ளி:** நீங்கள் வாழ்வைத் தர மறுக்கும்போது சாகத்தானே வேண்டும் நான்!

**மூர்த்தி:** இதென்ன புதிய தொல்லை-அடடா ......காதலாம்! வாழ்வாம்; சாவாம்......சே! சே! என்ன உலகமடா இது.

**வள்ளி:** உங்கள் சாபம்உலகத்துக்கெதற்கு, உலகம் ஒரு மழலைக் குழந்தை. அணைத்தால் சிரிக்கும்-அடித்தால் அழும்!

*மூர்த்தி:* தத்துவங்கேட்கநேரமில்லை-நெஞ்செல்லாம் நெருப்பு!

**வள்ளி:** மோகதாகம் நெஞ்சை வேவைக்குமாமே அதுதான் இப்போது உங்களுக்கு! எண்ணத்தில் பொன்னேவியமான கண்ணாளா! வாழ்வின் புதிய திருப்பத்துக்கு அழைக்கிறேன். சோலை வனத்தின் குளிர்ச்சி, சுந்தரத் தடாகத்தின் கவர்ச்சி......காதல் நெஞ்சுக்குக் கசக்குமா அன்பே!

*மூர்த்தி:* அன்பே; ஆருயிரே: கண்ணாளா......இதெல்லாம்கேட்டுச் சலித்த கேலி மொழிகள். அந்த அலங்காரச்சொல் ஒவ்வொன்றும் காதல்வலையின் ஒவ்வொரு இரும்புக் கம்பியேதான். வர்ண ஜாலத்தை வாழ்வு விளக்காக நம்பிவிட்டேன். வள்ளி......

(நீண்ட பெருமூச்சோடு வள்ளியை நிமிர்ந்து பார்க்கிருன். கதை பேசும் காரிகையின் கண்கள் அவன் கருத்தை இழுத்து வைக்கிறது. விம்மித் தணிந்த தங்க மெருகு பூசப்பட்ட அவளின் அங்கங்களைப் பார்த்துக் கொண்டே,)

......வள்ளி! உன்னைப்புரிந்து கொண்டேன். உனக்கு என்மீது உண்மையான அன்பிருக்கிறதல்லவா?

*வள்ளி:* இதை இன்னுமா நான் சொல்லவேண்டும். என் பெருமூச்சுக்குப் பேசும் சக்தியிருந்தால்-அது கூறிவிடுமே என் கதையை...!

*மூர்த்தி:* வள்ளி! என்மீது பாசமிருக்குமானுல்...இன்றுஎன்னைப் பிரிந்து நாளை வா......!

*வள்ளி:* 'நாளை-வா' ...தேள் கொட்டவில்லை—தேன் சொட்டுகிறது. என் காதல் காவியத்தின் கதா நாயகரே! நாளையே நான் வருகிறேன். ஆனுல்...நாளைக்கும் என் இன்ப நிலா ஏமாற்றி விட்டால் அதற்குத்தான் சொல்லுகிறேன் இப்போது......அச்சாரமாக......!

*மூர்த்தி:* அதெல்லாம் இன்று வேண்டாம், நாளை!

(கூந்தலிலிருந்து விழுந்த ஒரு ரோஜா மலரை அவன் மடியிலேயே விட்டுச் செல்லுகிருள் வள்ளி. மலரைக்கரத்திலெடுத்து முகர்ந்துகொண்டே ...வள்ளியின் ஒயிலான மயில் நடையிலே பார்வையைப் பதிக்கிருன் மூர்த்தி.)

*மூர்த்தி:* (மெல்லிய குரலில்)

பூக்காட்டிலே பாம்பு மிருக்கிறது! முள் காட்டிலே புதையலுமிருக்கிறது. நல்லவளாகத் தெரிந்த ராஜம் நச்சுப்பை தாங்கிய பாம்பாகி விட்டாள். வள்ளியோ... முள் காடென நினைத்தேன், அங்கே... புதையலிருந்தால்......?

**காட்சி:—26,**

*இடம்—திகம்பரர் மாளிகை*

*நிலைமை:—* வீட்டின் பின் பகுதித் தோட்டத்திலமர்ந்திருக்கும் ராஜம் சோக கீதம் பாடிக்கொண்டிருக்கிருள். சிரித்துக்கொண்டே வந்த கோகிலம்

*கோகி:—* அப்பப்பா! எப்போது பார்த்தாலும் இந்தசோக கீதந்தானு? ராஜம்! துன்பரேகைகள் நீங்கிய நிலாமுகத்தை நான் எப்போதுதான் பார்ப்பது...?

*ராஜம்:—* புயல் புகுந்த நெஞ்சுக்கு அமைதி ஏது கோகிலா?

*கோ:—* மூர்த்தியை நீ இன்னும் சந்திக்க வில்லையா...?

*ரா:—* சந்திப்பு......! அதற்குத்தான் தடையாகயிருக்கிறதே ஒரு கொடும் புலி!

*கோ:—* கொடும்புலியா!

*ரா:—* ஆமாம் — உள்ளத்தைக் கள்ளர் குகையாக்கியிருக்கும் பல வேசத்தை வேறு எப்படித்தான் அழைப்பது?

*கோ:—* பலவேசத்துக்கும் நிலைமை புரிந்து விட்டதா?

*ரா;—* நிலைமை தெரிந்துதான் என்னை நிம்மதியில்லாமல் ஆக்கு

### மா. தங்கவேலர்

கிருன். அவரைத்தேடி ஓடினேன் ஆற்ருரத்துக்கு!—இரண்டு நாளுக் பலவேசந்தான் பாதையை மறைத்து நின்ருன்.

*கோ:—* உள்ள உண்மையைக் கூறி விடுவதுதானே அவனிடம்.

*ரா:—* அதையும் கூறுமவில்லை! நரிக்குணம் படைத்தவன்...மனிதத்தத்துவத்துக்குளங்கே மதிப்பு தரப் போகிருன். பலவேசத்தை நினைத்தால்தான் பயமாகயிருக்கிறது. காதல் பாதையின் முன்னே முள் வேலியாகி விட்டான் அந்த முரடன்,

*கோ:—* பலவேசமும், வீரனும் நேற்றுக்கூட அப்பாவிடம் வந்து ரகசியம் பேசி அழைத்துச் சென்ருர்கள்.

*ரா:—* என்னைப்பற்றி ஏதாவது கதை கட்டி உன் அப்பாவிடம் நம்ப வைத்திருப்பான்.

*கோ:—* என் அப்பா உன்அப்பாவிடம் கூறி அரை வேதனைப் படுத்தி விடுவாரென்று பார்க்கிருய்...அப்படித்தானே!

*ரா:—* ஆமாம் கோகிலா!...... இப்படி ஒரு சம்பவம் நடந்ததை பிறர் கூறக்கேட்டால்......தாங்க முடியாத வேதனைக்கு ஆளாவார் என் தந்தை......

*கோ:—* அதைப்பற்றிநீ கவலைப் படாதே நான்பார்த்துக் கொள்ளுகிறேன்...போய் வரட்டுமா?

(தலையசைத்து விடை தருகிருள் ராஜம்)

(அடுத்த வாரம்)

## சென்னையில் புதிய கட்சி

17—10—56 மாலை 6-மணிக்கு சென்னை தங்கசாலைத் தெரு, 366-ம் நம்பர் இல்லத்தில் ஒரு கூட்டம் கூடியது திரு எ, ரத்தினம் எம்.எல்.ஏ, தலைமை வகித்தார். அதுபோது மாகாண புது அமைப்பு திட்டங்கள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு பலம் வாய்ந்த அரசியல் கட்சியை அமைப்பதென்றும், அக்கட்சியில் ஜாதி மத பாகுபாடு அற்ற எல்லா சமுதாய மக்களையும் ஒன்று திரட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கட்சிக்கு 'தமிழ் நாடு ஜனநாயக கட்சி' என்று பெயரிடுவதென முடிவு செய்யப்பட்டது,


இக்கட்சியில் விவசாயிகள், தொழிலாளிகள் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மற்ற சமூகத்தவர்கள் ஆகியவர்களை ஏழை—பணக்காரன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன், என்ற பாகுபாடின்றி சேர்த்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இக்கமிட்டியின் தலைமை அலுவலகத்தை 366 தங்கசாலை தெரு சென்னை1 நிறுவுவதென தீர்மானிக்கப்பட்டது.

இக்கட்சியின் கன்வீனராக திரு. ஏ. ரத்தினம் எம். எல். ஏ, அவர்களை நியமிக்கப்பட்டதுடன் வருகிறபொதுத் தேர்தலில் போட்டி யிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது என எ, ரத்தினம் எம். எல் எ., அறிவிக்கிருர்.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண் சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்



தயாரிப்பவர்:
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம்ரோடு
தஞ்சாவூர்

## ஏஜெண்டு தோழர்களுக்கு

●

வணக்கம். தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அக்டோபர் மாதத்திய பட்டியலுக்கேற்ப பணத்தை உடன் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி—திராவிடன்.


# திராவிடன்

சென்னை : 28—10—55 : வெள்ளி


# ஏகாதிபத்யத் திருவிளையாடலா?

●

இந்தியப் பேரரசினரால் நியமிக்கப்பட்ட மாநில புது அமைப்புக்குழுவினரின் அறிக்கை குறித்து இந்திய துணைக் கண்டத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள பலத்த எதிர்ப்புகளை நண்பர்கள் அறிந்ததேயாகும். அது போலவே அந்த அறிக்கையிலுள்ள பெருங்குறைபாடுகளை தி. மு. கழகம் உள்ளிட்ட எல்லா அரசியல் கட்சிகளும் எடுத்துக்காட்டி டெல்லி தேவதைகளுக்கு அறிவுறுத்தியுமிருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல், ஐதராபாத்தில் இத்திங்கள் 23, 24, 25 ஆகிய மூன்று தினங்களாக நடைபெற்ற அனைத்திந்திய மொழிவழி மாநில மாநாட்டின் செயற்குழுவிலும், மாநில புதுஅமைப்புக் குழுவின் அறிக்கை, நீதி நேர்மை ஆகியவைகளுக்கு நேர்மாரான முறையில் காணப்படுகிறதென்றும், அவர்களிடம் மக்கள் சாட்சியம் கூறியபடி திட்டம் வகுக்காமல் வேறு எதையோ மனதில் கொண்டு அறிக்கை வெளியிட்டிருப்பதாகவும் எடுத்துக்காட்டி வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

மேலும் அம்மாநாட்டில், செய்யப்பட்ட முடிவுகளில், மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையிலுள்ள அநீதிகளை ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் உடனடியாக தீர்ப்பதற்கு முனையாவிட்டால் அறிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாநில மக்களுக்கு நீதியைத் தேடித்தரத்தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

அறிக்கை வெளியானதிலிருந்து கடந்த 20 நாட்களாக டில்லியில் எல்லா மாநில முதலமைச்சர்களிலிருந்து மற்றும் பல முக்கியஸ்தர்களும், கட்சித் தலைவர்களும் கூடிப்பேசியுங்கூட பசல்அலி குழுவின் அறிக்கையிலுள்ள குளறுபடிகளைத் தீர்க்க வழிவகை காணமுடியவில்லை, அந்த அளவுக்கு அவ்வறிக்கையில் மொழிவழிப் பிரச்சினையை அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது.

எனினும், நாட்டில் வீரிட்டெழுந்துள்ள மக்களின் மனக் கொதிப்பை மதிக்கும் மனவளம் இன்னும் நேரு சர்க்காருக்கு ஏற்படவில்லை யென்றே தெரிகிறது. ஏதோ பெயரளவுக்கு எல்லா மாநில அமைச்சர்களையும், குறிப்பிட்ட இரண்டொரு அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி விட்டால், ஆகா! நேரு சர்க்காரின் ஜனநாயகமே அலாதிதான் என புகழும் அளவுக்கு, பாதிக்கப்பட மக்களின் உச்சி குளிர்ந்துவிடும் அல்லது பிரச்னையிலுள்ள கோளாறுகளையும் மறந்து விடுவர் என்ற மனப்பால் குடிப்பதாகவே நேரு சர்க்காரின் போக்கிலிருந்து தெரியவருகிறது.

ஜனநாயகம் என்ற பேரால் ஏகாதிபத்தியத் திருவிளையாடலை நேரு சர்க்கார் எவ்வளவு சாமர்த்தியமாக நடத்த முயன்றாலும், அந்த சாணக்கிய முறைகளை தகர்த்தெறியும் நிலைக்கு நாட்டிலே அரசியல் விழிப்பும்—உணர்ச்சியும் வளர்ந்து வருகிறதென்பதை நேரு பண்டிதர் கூட அடிக்கடி மறந்து விடுவது கண்டு ஆச்சரியப்படுகிறோம்.

நாம் இவ்வாறு கூறுவதற்குக்காரணம், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு இன-மொழிவழி மக்களின் ஒருமித்த கண்டனங்களுக்கு எந்தக் குழுவினரின் நடவடிக்கைகள் வித்திடப்பட்டதோ, அதே குழுவினரை, மாநில புது அமைப்பினை செயல் முறைக்குக் கொண்டுவர இந்தியப் பேரரசினர் தங்களுக்கு ஆலோசகர்களாக நியமித்துக் கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநில புது அமைப்புக் குழுவினர், கடந்த இரண்டு ஆண்டுகளாக நாடெங்கும் சுற்றி அந்தந்த மொழிவழி மாநில மக்களிடம் கேட்டறிந்த விவரங்களுக்கேற்ப தீர்ப்புகூறுமல், தங்களின் எஜமானர்களாகிய நேரு சர்க்காரைப் பலப்படுத்துவது என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, தங்கள் ஆலோசனையை வெளியிட்டுள்ளனர். இதனை அக்குழுவினரே வெளிப்படையாகவும் குறிப்பிட்டிருக்கின்றனர். அதாவது எங்களுக்கு நேரு சர்க்கார் இட்ட கட்டளைப்படி நடந்தோம் என்று மறைமுகமாக சுட்டிக் காட்டுவதைப்போல!

எனவே அதே குழுவினரை மீண்டும் இந்தியப் பேரரசு ஆலோசகர்களாக நியமிப்ப தென்பது அறிவுடமையாகுமா. ஜனநாயகம் என்ற வார்த்தைக்காகிலும் மதிப்பு தந்ததாகுமா என்பதை சிந்திக்க வேண்டுகிறோம்.

பசல் அலி குழுவினரின் அறிக்கையின் மீது நாட்டிலே ஏற்பட்டுள்ள கண்டனங்கள், மனக்குமறல் ஆகியவைகளுக்கு நேரு சர்க்காரோ அல்லது நேரு பண்டிதரோ ஓரளவாவது மதிப்பு தந்து மனமார ஆவன செய்ய வேண்டுமென்ற பெரும் புத்தி கொண்டிருப்பார்களானால், பசல் அலி குழுவின் அறிக்கையை வைத்து, மொழிவழி மாநில அமைப்புக்கு உடனடியாக சிறந்த செயலாற்றக் கூடிய ஒரு குழுவையோ அல்லது எல்லைக் கமிஷனையோ நியமித்து மிகக் குறைந்த காலத்தில் தீர்ப்பைத் தெரிவிக்கவும் அது போலவே அதனை செயல் முறைக்கு கொண்டு வரவுமல்லவோ முற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் நேரு பண்டிதரின் ஆட்சியோ ஏகாதிபத்ய திருவிளையாடல்களில் ஈடுபட முனைந்து நிற்கிறது.

மொழிவழிப்படி மாநிலங்கள் அமையவேண்டும் என்ற நீண்டகால உரிமையை—காங்கிரஸ்காரர்களாலேயே கேட்கப்பட்டுவந்த உரிமையை—அனைவருக்கும் பொதுவான உரிமையை—வழங்குவதிலேயே நேரு சர்க்கார், வெள்ளையன் கையாண்டதைவிட மிக மட்டமான தகிடுதத்தங்களில் இறங்கத் துணிவு கொள்கிறதென்றால், மொழிவழி அமையப் போகும் மாநிலங்கள் தனி உரிமைக்கோரி ஒன்றுபட்டு நிற்கும்போது இன்னும் என்னென்ன திருவிளையாடல்களில் இறங்குமோ அறியோம்!

---

# “சங்கர்ஸ் இராமாயணம்!”

## இராம விழா வாரத்திற்கு பரிசு!

●

இராமன்—உயிரோடிருந்தால், அல்லது இராம சிலைகளுக்கு பேசும் சக்தியை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துக் கொடுத்தால், தன் பேரால் கிளம்பும் “இராமாயணங்களை”க் கண்டு மனவேதனைப் பட்டிருப்பார்! வால்மீகியிலிருந்து—சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரிகள் வரை இராமாயண காதை என்ற பேரால் ராமனைப்படுத்தும் பாட்டினை மறைமுகமாகக் குத்திக்காட்டுகிறது ‘சங்கர்ஸ் வீக்லி’யின் இவ்வார எடுத்துக் காட்டு!

டில்லி “சங்கர்ஸ்வீக்லி” ஆங்கில வாரத்தாளில் “இவ்வார மனிதன்” என்ற தலைப்பில் பெண் முகமும் மெலிந்த உடலுமாகிய படத்துடன் எழுதியுள்ள நகைப்புக்குறிப்பின் கருத்து:—

“டில்லியில் இது இராமச்சந்திரன் வாரம் இந்த ராமச்சந்திரனுக்கு ஒரு ‘பாக்கிஸ்தான்’ ஏற்படும் அளவுக்கு சங்கடமேற்பட்டது! அப்போது நாட்டுப் பிரிவினையை ராமன் வற்புறுத்தியிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும்? உத்திரப் பிரதேசத்தின் கதி யாதாகியிருக்கும்? இதை தோழர் சம்பூர்ணானந்தா விரும்பியிருப்பாரா?

பெரியாரைப் பின்பற்றுகிறார்களே, அவர்களைப்போலவே உத்திரப்பிரதேச காங்கிரஸ்காரர்களும் ராவணனைப் போற்றுகிறவர்களாக ஆகியிருப்பார்கள், ராமச்சந்திரன் பாமர மக்களிடம் அதிக செல்வாக்கு பெற்றிருந்தான். பறவைகளும் குரங்குகளும்கூட அவன் கட்டளைக்குக் குதித்தாடின.

ஆனால் அதனை சினிமாபடமாக்கும் எண்ணம் அவன் மனதில் இருந்ததில்லை. அன்று அவன் காலத்தில் இலங்கைப் பிரச்சனைகூட அவ்வளவாக இல்லை! சீதை ஒருவள் தான் குடியேறினள்.

இப்போது கொத்தலாவலை செய்வதுபோல் செய்யாமல் ராவணன் சீதையை தன் நாட்டில் இருக்கச்செய்தான். நேசபாவமான ஒரு அயல் நாட்டைத் தாக்க இதையே ஒரு காரணமாகக் கொண்டு விட்டான் அந்த ராமச்சந்திரன்!

---

## அடுத்த வாரம்

- ○ கலை அரங்கம்
- ○ திராவிடப் பூங்கா
- ○ சுல்தானா-ரசியா
- ○ நக்கீரனின் கட்டுரை

ஆகியவைகளும் 4—11—55 திராவிடன் இதழில் வெளிவரும்.

---

### பிறப்பு

திட்டக்குடி தி. மு. கழகத் தோழர் தி. கொ. சிங்காரம் அவர்களின் துணைவியார் தோழியர் மீனாட்சி அம்மையயர் 20—9—55 அன்று ஓர்ஆண்மகவுக்குத் தாயானர். தாயும்—சேயும் நலம்.

# துவக்கக் கல்விச் சீர்திருத்தம்

- ★ ஆங்கிலம் கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும்
- ★ மத போதனைக்கு முற்றுப் புள்ளி
- ★ இந்தி ஆதிக்கத்துக்கு வேட்டு
- ★ ஆசிரியர்களின் சம்பளம், மற்ற வசதிகள் உயர்த்தப்பட்டு நிலைபெறச் செய்ய வேண்டும்.

## டாக்டர் அழகப்பா குழுவினரின் தீர்ப்பு

ஆரம்பக் கல்விச் சீர்திருத்த விஷயத்தில் கவனம் செலுத்தி சிபாரிசுகளைச் செய்ய நியமிக்கப்பட்ட டாக்டர் அழகப்ப செட்டியார் குழுவின் அறிக்கை அதிகார பூர்வமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன்விவரங்களில் சில இங்கு தரப்படுகின்றன,

●

ஆரம்பக் கல்வி படிப்பு 8-ஆண்டுகள் கொண்டதான, ஒரே அமைப்புடன் கூடிய பாடத்திட்டத்துடன் இருக்க வேண்டும், பள்ளியில் மாணவர்கள் சேர்க்கப்படவேண்டிய வயது 5 வயது பூர்த்தியானபிறகு,

6-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு முடிய எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்.

உயர் எலிமெண்டரியில் ஹிந்திபோன்ற ஒருபுது மொழியைச் சேர்க்கவேண்டாம். ஒவ்வொரு ''உயர் எலிமெண்டரி'' பள்ளிக்கும் உடனடியாக இன்னும் ஒரு ஆசிரியர் அதிகப்படியாகச் சேர்க்க அனுமதி தரவேண்டும்.

இவர் பிரதேச மொழியில் பண்டிதராக இருக்கவேண்டும், பண்டிதர்கள் போதிய தொகையில் கிடைக்காவிடில் ''செகண்டரி கிரேட்'' அல்லது ஸீனியர் பேஸிக் பயிற்சி பெற்ற ஆசிரியராக இருக்கவேண்டும்'

''உயர் எலிமெண்டரியில்'' எட்டாவது வகுப்பில் சர்க்கார் பரீட்சைவைத்து சர்டிபிகேட் வழங்கி மறுபடியும் பரீட்சை எழுதாமலே ஹைஸ்கூல் 4-வது படிவத்தில் சேருவதற்கு இப்பொழுதுள்ள முறை நீடிக்கலாம்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு 1939-ல் ஏற்படுத்தப்பட்ட பாடத் திட்டத்தைத் திருத்தியமைப்பதுபற்றி ஆலோசனை செய்ய ஒரு குழுவை நியமிக்கலாம்.

ஆதாரக் கல்வியின் சில அம்சங்கள்— அதாவது சுகாதாரமான வாழ்க்கைப் பழக்கம். தன்னம்பிக்கை, கலாசாரத் தொடர்பு முதலிய அம்சங்களை ஆரம்பக்கல்விப்பாடத் திட்டத்திலேயே சேர்த்துவிடலாம்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு இப்பொழுது வருஷத்தில் 220- நாட்கள் பள்ளிக்கூடம் இருக்கிறது. இதைக் குறைக்க வேண்டியதில்லை. ஒவ்வொருநாளும் எத்தனை மணி நேரம் படிப்பு என்பதையும் குறைக்க வேண்டியதில்லை.

'மிடில்' பள்ளிகளில் 1, 2, 3-வது படிவங்களும் செகண்டரி பள்ளிக்கூடங்களில் ஆரம்ப வகுப்புகளும் படிப்படியாக ஆதாரக் கல்வியமைப்புக்கு ஏற்றபடி மாற்றப்படவேண்டும். முதலில் செகண்டரி பள்ளிகளிலுள்ள பிரைமரி வகுப்புகளை எடுத்துக் கொள்ளலாம்.

ஆதாரப் பள்ளிகளில் பொருளுற்பத்தி செய்யும் தொழிற் கல்வியை மூன்றுவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கலாம், முதல் இரண்டு வகுப்புக்களில் செய்கின்ற வேலை லாபகரமாக இருக்கின்றதா என்பதில் கவனம் செலுத்தாமல் ஓரளவு கைப்பழக்கம் ஏற்படுவதை மட்டும் நோக்கமாகக்கொண்டு சில வேலைகளுக்கு ஏற்பாடு செய்யலாம்,

பெரும்பான்மையான ஆதாரப் பள்ளிகளில் தோட்ட வேலையே தொழிற் பயிற்சிக்கு முக்கியமாகக் கொள்ளலாம். சாத்தியமான இடங்களில் பண்டங்கள் செய்தல், பாய் நெய்தல் முதலியவற்றை ஏற்படுத்திப் பார்க்கலாம்.

ஆதாரக் கல்வியில் தயாரிக்கப்படும் பொருள்களை அந்த மூலப்பொருளின் விலையில் ஒருபகுதியைக் கொடுத்து மாணவர்களே உபயோகித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

பல பள்ளிக்கூடங்களை வைத்து நிர்வகிக்கும் ஸ்தாபனங்கள் தம்மிடமுள்ள ஆரம்ப பள்ளிகளுக்கென்று தனியாக ஒரு நிர்வாகக் கவுன்ஸில் ஏற்படுத்தவேண்டும். அந்தக் கவுன்ஸிலின் அமைப்பு சர்க்காரின் கல்வி இலாகா ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அந்தக் கவுன்ஸிலுக்கு சர்க்கார் தம் சார்பில் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும்.

நகர சபைகள் தமது பள்ளிக்கூடங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளலாம். நகர சபைகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் திறமையுடன் வேலை செய்யும் பொருட்டு சர்க்கார் போதிய உதவியளிக்க வேண்டும்.

தற்காலம் ஜில்லா போர்டுகள் நிர்வாகத்திலும் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திலும் இருந்துவரும் பள்ளிகளின் நிர்வாகத்தை பிரதேச போர்டுகளிடம் ஒப்படைக்க வேண்டும்.இனிமேல் எந்தப்புதிய பள்ளிக்கூடமும் நகர சபைகளாலோ அல்லது பிரதேச போர்டுகளாளோதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தனியார் நடத்தும் பள்ளியாயிருந்தாலும் சரி, பொது ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளியா யிருந்தாலும் சரி, மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கக்கூடாது.

ஆரம்பப் பள்ளியில் 1, 2, 3-வது வகுப்புகளுக்கு சாத்தியமான வரையில் பெண்களை ஆசிரியப் பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் திருமணமான பெண்களை நாள் தோறும் காலை அல்லது மாலை ஏதேனும் ஒரு வேளையில் மட்டும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியராக இருக்கும்படி நியமிக்கலாம். பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிப்பதைவிட, ஆசிரியப் பயிற்சி பெற்ற பெண்களை இவ்வாறு நியமிப்பது விரும்பத்தக்கதாகும்.

ஆசிரியர்களுக்கு பிராவிடெண்ட பண்டு பென்ஷன் முறையைச் சர்க்கார் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறது. இதனுடன் கட்டாய இன்ஷ்யூரன்ஸுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

ஆசிரியர்களைப் போன்ற அதே அளவு பொதுக் கல்வி பெற்றவர்களுக்கு வேறு துறைகளில் கொடுக்கப்படும் சம்பளத்தை விட ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் பொது கல்வி பயின்றதும் அல்லாமல் இவர்கள் ஆசிரியர் பதவிக்காகத் தனிப்பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். உடனடியாகவே திருப்திகரமான சம்பளம் கொடுக்கப்படாவிட்டாலும் இப்போதே தாமதமின்றி சம்பளங்கள் ஓரளவாவது உயர்த்தப்பட வேண்டும். பள்ளிக்கூடம் இருக்கும் ஊரிலேயே ஆசிரியருக்கு ஜாகை (வீட்டு) வசதி ஏற்பாடு செய்வதில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்.

புதிதாகப்பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கும் போது தொடக்கத்திலிருந்தே ஆசிரியருக்கு வீட்டு வசதி ஏற்படுத்தவேண்டும்.

கட்டாயக் கல்வி முறை ஏற்படுத்துவதற்கு முன்னதாக, அதாவது அதற்கு முதற்படியாக மூன்னூருக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் அதே ஊரிலோ, அல்லது வெகு சமீபத்திலுள்ள ஊரிலோ ஒரு பள்ளிக்கூடம் இருக்குமாறு ஏற்பாடு செய்துவிட வேண்டும்.

பள்ளிக்கூடங்களுக்குச் சரியான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். இதற்கு ஒரு தீவிரமான பிரசார முயற்சி தேவை. அபிவிருத்தி இலாகாக்களின் உதவியையும் இதில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு தகுதியான புத்தகாலயம் இருக்க வேண்டும்.

சரியான பாடபுத்தகங்கள் தயாரிப்பதில் கல்வி இலாகாவுக்கும் பிரசுரகர்த்தாக்களுக்கும் ஆலோசனை கூறுவதற்காக வேண்டிய ஆராய்ச்சிகள் நடத்த ஏதேனும் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஒரு ''ஆராய்ச்சிப் பகுதி'' ஏற்படுத்த வேண்டும். குறிப்பிட்ட காரணங்களாலல்லாது பாட புத்தகத்தை அடிக்கடி மாற்றக் கூடாது. மூன்று வருஷத்துக்கு ஒருமுறைதான் மாற்றலாம்'

பள்ளிக்கூடத்துக்கு அருகாமையிலேயே ஜாகை வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் ஒற்றை யாசிரியர் பள்ளிகளில் ஆசிரியராக வர சிலருக்கு ஊக்கம் ஏற்படும்.

ஆசிரியர்க்குப் பயிற்சி யளிக்கும்போது ஒற்றையாசிரியர் பள்ளிகளின் பிரச்னைகளையும் கருத்தில் கொண்டு ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை எவ்வாறு சமாளிப்பது என்பதிலும் பயிற்சியளிக்கப் படவேண்டும்,

'செகண்டரி கிரேட்' பயிற்சி பெற்றவர்களைத்தான் ஒற்றை யாசிரியர் பள்ளிகளுக்கு நியமிக்கலாம். பயிற்சியில்லாதவர்களை நியமிக்கக்கூடாது.

ஒரு ஒற்றையாசிரியர் பள்ளியானது நாளாவட்டத்தில் பல ஆசிரியர்கள் கொண்ட பள்ளியாக ஆகும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லையாயின் அப்படிப்பட்ட பள்ளியில் 1, 2, 3 ஆகிய மூன்று வகுப்புகளே இருக்கலாம், அந்தப்பள்ளியை வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொடுக்கும் 'பீடர்' பள்ளியாகவே அங்கீகரிக்க வேண்டும்.

கிராமங்களுக்கு கொடுக்கப்படும் சமுதாய ரேடியோ செட்டுகளை கூடுமானவரையில் பள்ளிக்கூடக்களிலேயே வைப்பது நலம் கல்வி ஒலிபரப்புக்களை பயன்படுத்திக் கொள்ள மாணவர்களுக்கு இது உதவியாகும்.

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ''பொருட்காட்சி' சாலை இருக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் சிறுவர்களுக்கான ஒரு 'பொருட் காட்சி' சாலை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கவேண்டும்.

பள்ளிகளில் பாடநேரத்தில் மதக்கல்வி போதிக்கக்கூடாது. ஆனால் ஒழுக்கம் பற்றிய போதனை இருக்கவேண்டும். இது பாடத்திட்டத்தின் பகுதியாகவே அமையவேண்டும்.

●

### பிரதேச போர்டுகள்

பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களும் ஜில்லா போர்ட் பள்ளிக்கூடங்களும் ''பிரதேச போர்டு''களின் நிர்வாகத்துக்கு மாற்றப்படவேண்டும். 200 பள்ளிக்கூடங்களுக்கு அதிகப்படாமல் ஒரு போர்டின்கீழ் இருக்கலாம்.

இந்த போர்டில் 9-க்கு குறையாத அங்கத்தினர்கள் இருக்கலாம்.

(1.) ஜில்லா போர்டின் பிரதிநிதிகள் நால்வர் (2.) பஞ்சாயத்து பிரதிநிதிகள் மூவர். (3.) கல்வியில் சிரத்தையுள்ள இருவரை சர்க்கார் நியமிக்கலாம். ஜில்லா போர்ட் பஞ்சாயத் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். போர்ட் 3-வருஷம் பதவி வகிக்கும். ஜில்லாபோர்டுக்கும் கல்வி இலாகாவுக்கு மிடையே இருந்துவரும் ஆரம்பக் கல்வி நிதி இந்த போர்டுக்குச் சேரவேண்டும்.




திரு. காமராசர் அவர்கள் சென்னை.

முதலமைச்சரே, வணக்கம். மாநில புது அமைப்புக் குழுவின் மீது ஒவ்வொரு மாநில முதலமைச்சரும் அவர்களின் திட்டவட்டமான எண்ணங்களைவற்புறுத்தி டில்லியில் நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில் கூறியிருப்பதாக தின இதழ்கள் கூறுகின்றன.

தங்களின் குறிப்பை அறிந்து குழுவின் தீர்ப்பை மாற்ருவிடில் நாங்கள் வகிக்கும் பதவிகளையே ராஜிநாமா செய்து விடுவோம் என்று சில மாநில அமைச்சர்களும் டில்லி மாநாட்டில் நேரு பண்டிதர் முன்னிலையில் அறிவுறுத்தி யிருக்கின்றனர்!

சென்னை முதலமைச்சராகிய தாங்களும், தங்களுடன் வந்த அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும் தமிழ் நாட்டு மக்களின் ஒருமித்த எண்ணத்தை வற்புறுத்திக் கூறியதாகத் தெரியவில்லை.

குழுவின் தீர்ப்பில் சென்னை ராஜ்யம் என்றிருப்பதை தமிழகம் அல்லது தமிழ் நாடு என அழைக்கப்பட வேண்டும் என்ற முக்கிய பிரச்சினையைத் தாங்கள் அம்மாநாட்டில் எடுத்துக் கூறியதாகவும் தகவல் இல்லை.

தேவிகுளம், பீர்மேடு போன்ற தாலுக்காக்கள் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென்பதை மட்டும் டெல்லி மாநாட்டில் எடுத்தியம்பியதாகப் பத்திரிகை நிருபர்களிடம் தாங்களே கூறியிருக்கிறீர்கள்.

இதைக்கூட மாற்றுக்கட்சிகள் குறைக்கூறப் போகின்றன, என்பதற்காகத்தான் அங்கு எடுத்துக்காட்டி யிருக்கிறீர்களோ அல்லது மனமார வெளியிட்டிருக்கிறீர்களோ யென்பதும் ஐயப்பாட்டிற் குறியதாகவே யிருக்கிறது. அது எவ்வாறாயினும் யான் சில யோசனைகளை—வேண்டுகோளைக் கூற விரும்புகிறேன்.

நவம்பர் மாதத் துவக்கத்தில் மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையை விவாதிப்பதற்காக தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழு கூடப் போவதாகவும், பின்னர் சென்னை சட்டசபையில் இது பற்றி விவாதிக்கப் போவதாகவும் தெரியவருகிறது.

அச்சமயங்களிலாகிலும் தாங்கள் உள்ளிட்ட எல்லா அமைச்சர்களும், காங்கிரஸ் உறுப்பினர்களும், மாநில புது அமைப்புக் குழு தென்னாட்டு மக்களுக்கு—குறிப்பாகத் தமிழகத்திற்குச் செய்துள்ள தீங்கினை டெல்லி தேவதைகளுக்கு எடுத்துக் காட்டித்திருத்துமாறு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாநில புது அமைப்புக் குழு தமிழகத்துக்கு விளைவித்துள்ள அநீதியை தி. மு. கழகம் விரிவாக எடுத்துக்காட்டி யிருப்பதை தாங்கள் மீண்டுமோர் முறை நடுநிலையிலிருந்து சிந்தித்து அதற்கேற்ப நடைமுறையில் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்தியா — தேச ஐக்கியம், நாமெல்லோரும் இந்தியர்கள் என்ற வரட்டுக்கூச்சலுக்கு, வழக்கம் போல இந்த முக்கிய பிரச்னையிலும் விட்டுக் கொடுத்து விட வேண்டாம் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

கூத்தரசன்.

●

மவுலானா அப்துல் கலாம் ஆசாத்

புதுடில்லி

இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சரே, வணக்கம். நலம் வேண்டுகிறேன். தாங்கள் டில்லியில் நடைபெற்ற மாணவர் மாநாட்டில் மாணவாகளிடையே கட்டுப்பாடும் ஒழுக்கமும் கெட்டுவிட்டதென்றும், இதற்குக் காரணம் ஆசிரியர்களில் சிலரின் போக்கே யாகுமென்றும் வருந்தியிருக்கிறீர்கள். அமைச்சரவர்களே, எய்தவனிருக்க அம்பை நோவது விவேகமல்ல. பொதுவாக இந்திய மாணவர்களிடையே கட்டுப்பாடு சீர்குலைவதற்கு முக்கிய காரணம் தேசிய போராட்டத்தின் போது காங்கிரஸ் தலைவர்களும் அந்த இயக்கமும் மாணவர்களுக்கு போதித்த பாடமேயாகும். ஆனால் இவ்வாறு நான் கூறுவதை தங்களைப் போன்றவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். எனவே மேலும் இதை குறித்து விவரிக்க நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு உண்மையை மட்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மாணவர்களிடம் கட்டுப்பாடில்லாத அவல நிலை வட நாட்டில் தான் தலைவிரித்தாடுகிறதேயல்லாது தென்னாட்டிலல்ல.

அண்மையில் நேரு பண்டிதர் சென்னை வந்த போது மாணவர்களைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியதற்கு — சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். எ. லட்சுமணசாமி அவர்கள் பதில் கூறுகையில்.

" இந்தியாவின் வட பகுதியில் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கட்டுப் பாட்டின்மையை தீர்ப்பதற்கு வழிவகை தேடுவதைவிட்டு, பொதுவாக அக்குற்றச் சாட்டை இந்தியாவின் எல்லா பகுதியிலுள்ள மாணவர்களின் மீதும் சுமத்தும் வகையில் பேசுவது வருந்தத்தக்கதாகும். தென்னாட்டைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை மாணவர்களிடம் நிறைவு பெற்றுள்ள கட்டுப்பாடு — கண்ணியம் ஆகியவைகளைக் கண்டு நான் பெருமைப் படுகிறேன்."

என்று இடித்துக் கூறியிருக்கிரூர். எனவே வட நாட்டிலுள்ள மாணவர்களின் குறைகளை அறிந்து அவர்களின் கட்டுமீறிய செயல்களுக்கு இடமில்லாமல் செய்வதே அறிவுடைமையாகும். அதைவிடுத்து கும்பலில் கோவிந்தா போடுவதைப்போல இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லாபகுதி மாணவர்களையும் சேர்த்துப் பழிப்பதோ அல்லது ஆசிரியர்களின் மீது சீறிவிழுவதிலோ அர்த்தமில்லை யென்பதையும் உணர வேண்டுகிறேன்.

கூத்தரசன்.

# அரசியல் ஜன்னி கண்டு அலறும் அமைச்சருக்கு அண்ணாவின் டோஸ்!

★

"காங்கிரசைக் கண்டித்து நாம் பேசியபோது, 'இவர்கள் ஏன் தேர்தலில் நிற்கக்கூடாது—வீண் வாய்ப் பேச்சுக்காரர்கள் தானே இவர்கள்?' என்று அமைச்சர் சுப்பிரமணியம் உட்பட காங்கிரஸ்காரர்கள் பலர் பேசிவருவது வழக்கம், 'வருகின்ற மாநில மாநாட்டில் முடிவு செய்யப்படுமானுல், வரப்போகும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்வோம், என்பதாக நாம் கூட்டங்களில் பேசிய பிறகு, சேலத்தில் பேசிய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், 'அண்ணாதுரை தேர்தலில் குதிப்பதாகச் சொல்லி, பாழுங் கிணற்றில் குதித்துவிடக் கூடாது,'— என்று எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் செய்தி கண்டேன்; அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கு நாம் சொல்லுகிரேம்— ,நாங்கள் குதிக்கப் போகும் தேர்தல் கிணறு பாழுங்கிணருக இருந்தால், உங்களை விட்டு விட மாட்டோம்; உங்களையும் சேர்த்து இழுத்துக்கொண்டுதான் அதில் குதிப்போம்; உங்களுக்கு அது பாழுங்கிணருக இருந்தால் எங்களுக்கும் அது பாழுங்கிணருக இருக்கட்டும்; அச்சத்தின் விளைவாக கனம் அமைச்சர் அவர்கள் அதிர்ச்சி அடையக் கூடாது; தேர்தல் நெருங்கட்டும் —அது குறித்துப் பார்த்துக் கொள்ளலாம்,"

—என்று, அண்ணா அவர்கள், 16—10—55-ல் தஞ்சை மாவட்டம் பாபநாசம் தி.மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# இந்தி ஆதிக்கத்துக்கு டாக்டர் நாயுடுவின் வேட்டு!

தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க சிறந்த வழி, ஆங்கிலத்தையே ராஜ்யங்களிலும், மத்ய சர்க்காரிலும் ராஜாங்க மொழியாகக் கொள்வது. ஆங்கிலம் சர்வதேச மொழியாகையால் அது ஒற்றுமைப் படுத்தும் சாதனமாக இருப்பதுடன் அயல் நாட்டு விஞ்ஞானம், மருத்துவம் முதலிய சாஸ்திரங்களைப் பயில உதவ வேண்டும். நாடு பூராவிலும்,ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரே மாதிரியான கல்வி முறை இருக்க வேண்டும். இதனுல் வேறு ராஜ்யங்களில் சென்று படிக்க வசதி பெருகும். தேசிய ராஜ்யம் அபிவிருத்தி அடையும். இதை அடையவும், தேசிய நோக்கத்தை அபிவிருத்தி செய்யவும் தமிழ் நாடு-ஆந்திரா-கேரளா-கர்நாடக ராஜீயங்களுக்குச் சேர்த்து ஒரே பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் ஹைக் கோர்ட்டும் இருந்தால் போதும்.

என்று டாக்டர். பி, வரதராஜலு நாயுடு அவர்கள், சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரி தாலுகா நாகரசம் பேட்டையில் பெரியார் ராமசாமி மண்டபத்தை 23—10—55-ம் நாள் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## செம்பியம் தி. மு. கழக வேண்டுகோள்

"1946ம் ஆண்டு நம்முடைய செம்பியம் வட்டம் நகராண்மைக் கழகத்தோடு இணைந்தது யாவரும் அறிந்ததே; அந்த இணைப்பின் பலனாக எல்லா வசதிகளை நாம் அடைந்திரா விட்டாலும் Maternity &Child Welfare Centre (பிரசவ விடுதி) பொது மக்களுக்காக இந்த 20-வது டிவிஷனில் இயங்கி வந்திருந்ததின் பயனாக இவ் வட்டாரத்து மக்கள் மட்டுமின்றி சுற்றுப்புரகிராமங்களில் வசிக்கும் மக்களும் பிரசவ விடுதியின் பயனை அனுபவித்து வந்திருந்தார்கள்,கடந்த6—10—55ம்தேதியிலிருந்து இப் பிரசவ விடுதியிலிருந்த படுக்கை வசதிகளைவேறு வட்டாரத்துக்குமாற்றியிருப்பதைக்கண்டு 30000 மக்கள் வாழும் இவ்வட்டாரத்தினர் மிகவும் வருத்தம் அடைந்துள்ளார்கள்,

எனவே, மாற்றப்பட்ட பிரசவவிடுதி படுக்கைகளை முன்பிருந்தபடி உடனடியாக இவ்வட்டாரத்திற்கு மாற்றி அமைக்குமாறு நகராண்மைக் கழக அதிகாரிகளையும் குறிப்பாக கமிஷனர் அவர்களையும் இவ்வட்டத்து மக்கள் சார்பாக கேட்டுக் கொள்வதுடன், நகராண்மைக் கழக உறுப்பினர்களான, திருவாளர்கள் ஆண்டியப்பன், முனுசாமி அவர்களையும் மாற்றப்பட்ட பிரசவ விடுதி படுக்கைகளை மீண்டும் விரைவில் கொண்டுவர எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறது"

என்ற தீர்மானம், செம்பியம் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் 23—10—55ம் தேதி ஞாயிறு மாலை தோழர் இளம்பரிதி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## இடி முழங்கியது . . தொடர்ச்சி

யும் நிறைந்த—இன்பமொழி கற்க கஷ்டமாக இருக்கிறது என்பதற்காக ஒதுக்கப்பட வேண்டுமாம்! கூறுகிறார் பண்டிதர்!

'இது இப்படி இருக்க நேரு அவர்கள் இந்தி கற்க எளிதாக இருப்பதால் உத்தியோக பாஷையாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது என்கிறார்கள்! ஆனால் கனம் சுப்ரமண்யம் அவர்கள் சட்ட சபையில் பேசும்போது இந்தி தேசிய மொழி—உத்தியோக மொழி என்ற பிரச்சினையே இல்லை, இந்தியை வைத்துக் கொள்ளலாமா என்பதுதான் பிரச்சினை என்றும் கருத்துப்பட பேசியிருக்கிறார் இருவருக்குள்ளே ஏன் இந்த வேற்றுமை! ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்கிறார் நேரு! அந்தப் பிரச்சினை இல்லை என்கிறார் சுப்பிரமணியம்!

தென்னிந்தியாவிற்குப் புறம்பான காரியங்களைச் செய்கிறார் நேரு! வேண்டாதவற்றை வற்புறுத்தி அமுக்குகிறார் —நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக! தென்னாடு தொழில் துறையில் முன்னேற வழிகாட்டாது—வடவருக்கு மார்க்கெட்டாக ஆகி வருகிறது! எடுத்ததெற்கெல்லாம் ஒரவஞ்சனை காட்டி நம்மை வஞ்சித்து வருகிறார்! இந்த நிலையில் சென்னை சாந்தி தருகிறது, தென்னாட்டவர்கள் அறிவுள்ளவர்கள், கெட்டிக்காரர்கள் என்று பேசுவது நம்மை ஏமாற்றவே!

சமீபத்தில் சர்க்கார் சரித்திர சம்பந்தமான இடங்களையும், கலை செறிந்த இடங்களையு  போய் பார்த்து வர வசதி செய்வதற்காக பல இலட்ச ருபாயில் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்! ஆனால் நேரு கூறுவதுபோல கலை செறிந்த தமிழ நாட்டில் ஒரு இடங் கூட வசதி செய்ய தேர்ந்தெடுக்கவில்லை இதுபற்றி 11—8—55 தமிழ் நாடு நாளிதழ் தனது துணைத் தலையங்கத்தில் தீட்டியிருப்பதைப் பார்க்க வேண்டுகிறோம்.'

1955—56 ஆம் ஆண்டில் புத்த கயா சாஞ்சி, ராஜகர், சார்நாத், குசிநகர் ஆகிய இடங்களில் தங்கு மிடங்களைக் கட்டுவதற்காகவும், சாலைகள் அமைப்பில் வளர்ச்சி காண்பதற்காகவும் ரூ 53 இலட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்று திரு ஓ. வி. அளகேசன் கூறியிருக்கிறார். தென் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்வோரைக் கவரும் இடங்கள் ஏராளமாக இருந்தும் மேற்கண்ட பட்டியலில் அவை இடம் பெறாதது வருந்தத் தக்கது,

நேருவின் பேச்சிற்கும்—செய்கைக்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் உணர்ந்து கொள்வதற்கு இது ஒன்றே நல்ல எடுத்துக் காட்டாகும்! ஏன்! பழம்பொருள் ஆராய்ச்சி விஷயத்திற்காக டில்லி பலரைத் தேர்ந்தெடுத்திருக்கிறதாம்! அதில் கூட, தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் படவில்லையாம்!

இதையும் 6—10—55 நாள் தமிழ் நாடு தனது துணைத் தலையங்கத்தில் கண்டிப்பதைப் பாருங்கள். இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பழம்பொருள் ஆராய்ச்சி மத்திய ஆலோசனைக் குழுவில் ஒரு தமிழர் கூட இடம் பெறாதது வியப்பை அளித்திருக்கிறது.

நேருவின் ஒருதலைப் பட்ச போக்குக்கு இதுவே போதும்! இனிக்கப் பேசுகிறார்! ஆனால் அதெல்லாம் நடிப்பு என்பது தெளிவு!

'சில முட்டாள்கள் நாட்டில் பிரிவினை சக்தியை வளர்த்து வருகிறார்கள்'

இந்தியாவைப் பிரிக்க வேண்டும், அல்லது துண்டாட வேண்டுமென்ற கூச்சல் இந்தியாவின் எப்பகுதியில் எத்தகையவரிடமிருந்து எழுந்த போதும் எக்காரணத்தைக் கொண்டும் இனி அதனை எவருமே சகிக்க முடியாது'

அன்று ஆந்திரா பிரிவினைக்கும் இந்தப் பல்லவிதான் பாடினார்! பாகிஸ்தான் பிரிவினைக்கும் இதே தான் கூறினார்! முடிவில் மக்கள் கோரிக்கைக்குப் பணிந்தார்!

பாரத நாட்டைப் பிரிப்பதற்கு ஒரு காலும் இணங்க மாட்டோம் என்று கூறியவர்கள் பாகிஸ்தான் பிரிவினைக்கு இணங்கினார்கள்! பின்னர் ஆந்திர நாட்டுப் பிரிவினைக்கு இணங்கினார்கள் அதுபோல் மக்கள் கருத்துப்படி நடப்பதே அரசாங்கப் பண்பாகும்! என்று 6—10—55 தமிழ்நாடு தீட்டியதுபோல நாளை நமது கோரிக்கைக்கு மதிப்பளிக்கத்தான் போகிறார் என்பது மட்டும் உறுதி!

பெரும் வரவேற்பை எண்ணிப் பூரித்துக் கிடக்கும் பண்டிதர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட வேண்டும்! வரவேற்பு கண்டு விவேகமற்ற தன்மையில் பேச வேண்டாம்! அதோ நீங்கள் செய்ய வேண்டியது ஏராளம்! எதை மக்கள் எதிர்பார்த்து வரவேற்றார்களோ அதைப் பூர்த்தி செய்யுங்கள் என்று பணிவன்புடன் நினைவூட்டுகிறோம்!

பாமரர்களால் பாராட்டப்பட்ட கொன்ஸ்கி—பாதை தவறினன்! முடிவில் பதவி இழந்தான்! 'கொன்ஸ்கி' கண்ட பாடத்தையே நேருவுக்கு அர்ப்பணிக்கிறோம் — அது அவருக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற ஆசையால்!

*

## இலங்கை அன்பர்களுக்கு

இலங்கைத் தீவுக்கு 'நம் நாடு' இதழ் விற்பனையாளராக கீழ்க்காணும் தோழர் நியமிக்கப்பட்டு, பிரதிகள் நாள்தோறும் விமானத்தின் மூலம் அனுப்பப்படுகின்றன. ஈழத்து அன்பர்கள் அனைவரும் அவரிடம் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

பொறுப்பாளர் : 'நம்நாடு'

*

தோழர் வி எஸ், முருகன்

32/13 குமாரத் தெரு, கொழும்பு-11

### கோபிசெட்டிபாளையம்

21—10—55 மாலை 6-30 மணிக்கு கோபி, புதுப்பாளையம் பகுத்தறிவு நூல் நிலைய உறுப்பினர்கள் கூட்டம் நிலைய தலைவர் பு. ப. காளியண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் படிப்பகத்திற்கு ரேடியோ ஒன்று வாங்க தீர்மானம் செய்யப்பட்டு உறுப்பினர்களால் ரூபாய் 170 நன்கொடையாக கொடுக்கப்பட்டது. பின்னர் தேநீர் விருந்து நடைபெற்றவுடன் செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ், ஆறுமுகம் நன்றிநவில கூட்டம் இனிது முடிந்தது,

## நடக்க இருப்பவை

### பந்தநல்லூர்

தி. மு. கழக சார்பில் 29—10—55 சனி மாலை 6-மணிக்கு பந்தநல்லூர் கடை வீதியில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் என். அசோகன் தலைமையில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள். என். கிட்டப்பா, ம. கோ. மணி பேசுவர். தோழர் துரை கழகப் பாடல்கள் பாடுவார்.

### மேலப்புதூர்

30-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு படிப்பக முன்பு தோழர் ச. செல்வராசன் தலைமையில் தி. மு கழக படிப்பகத் துவக்க விழா நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம் எஸ்; மணி, நெடுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

### குடந்தை

நகர தி. மு. க. சார்பில் 30—10—55 ஞாயிறு மாலை அரண்மனைத் தோட்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா மற்றும் பலர் பேசுவர்.

### மாயவரம்

நெல்லிக்குப்பம் மஜீத் மன்ற துவக்க விழா பொதுக்கூட்டம் 30—10—55 மாலை 6-மணிக்கு கூறைநாடு சடைவீதியில் தோழர் சா. மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன் பேசுவர்.

#### திருமணம்

அன்று காலை 9-மணிக்கு மாயூரம் பட்டமங்கலம் புளியங் தெருவில் மா. கி. இராமசாமி—சாவித்திரி ஆகியோரின் திருமணம் நடைபெறும். தோழர் என். வி. நடராசன், ஈ வி. கே. சம்பத், என், கிட்டப்பா, து, காசிநாதன் வாழ்த்துரை வழங்குவர்.

### மேலூர்-மதுரை

30-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு

## குடந்தையில் அறிஞர் அண்ணா

### சிறப்புக் கூட்டம்

குடந்தை இளைஞர் தமிழ்மன்ற கட்டிட நிதிக்காக 30-10-55 ஞாயிறு காலை 9-மணிக்கு குடந்தை மீனாட்சி தியேட்டரில், கொடவாசல் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும். அறிஞர் அண்ணா, தோழர்கள் என். வி, நடராசன், கே. எ. மதியழகன், சொற்பொழிவாற்றுவார்,

நன்கொடை அணா 8—4

○

### ஆங்கிலச் சொற்பொழிவு

30—10—55 ஞாயிறு பிற்பகல் 4-மணிக்கு குடந்தை தி. மா. மு. கழக சார்பில், போர்டர் டவுன் மண்டபத்தில் நடைபெறும். தோழர் டி, மதியழகன் (சீனியர் பி. எ, வகுப்பு) தலைமை வகிப்பார். அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுவார்.

### பி. அண் ஸி. மில் தொழிலாளர், தி. மு. க. மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பு,

6—11—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு (கான்ரன்ஸ்மித்நகர்) திரு. வி. க திடலில் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும், நிதிக்குழு செயலாளர் தோழர் டி. எஸ். சண்முகம் தலைமை வகிப்பார், அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும்பல தோழர்களும் பேசுவர் என நிதிக்குழுவின் துணைச்செயலாளர் கோ. கேசவன் அறிவிக்கிறார்,

தி.மு.க. சார்பில், முனியாண்டிகோயில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர். கண்ணதாசன் மற்றும் பலர் பேசுவர்;

### அனவரதநல்லூர்

30—10—55 ஞாயிறு மாலை 7-மணிக்கு வ. உ. சி. திடலில், திரு. வி. க. நாடக மன்றத் துவக்க விழா தா. சு. கணபதி அவர்கள் தலைமையில் நடைபெறும்


புத்தம் புதிய நாடக விருந்து !

கலையின் சிறப்பை நிலைநாட்டும் அமுது !

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்

28—10—55 வெள்ளி முதல் தினசரி இரவு 10-மணிக்கு

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

# புது வெள்ளம்

தீட்டியவர் திரு. சேதுராமன்

சனி, ஞாயிறுகளில் மாலை 6-45 மணிக்கு. 6—11—55, வரைதான் இவ்வூரில் எமது நாடகம் நடைபெறும்.

அடுத்த முகாம்—குடியாத்தம். கட்டணம் : 2-8-0, 1-8-0, அணா 12, 6. தாய்மார்களுக்குத் தரை அணா 4.

# இலங்கை

### இ. தி மு. க. கிராண்ட்பாஸ் கிளை

16—10—55 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு கழகப்பணி மனையில் பொதுச் செயலாளர் இரா. அதிமணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில். இடைக்கால நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிதாக நிரந்தரநிர்வாகிகள் கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயலாளர்:—ஆர். ஆர்.டெ டேலர். துணைச்செயலாளர்:— சுப: இராசமாணிக்கம். பொருளாளர் :— எஸ். எஸ். மணி. செயற்குழு உறுப்பினர்கள்:— டி. எம். பீர்முகம்மது. எம். கே. ஏ கபூர். எல். எம். எஸ். செய்து முகம்மது, எஸ். மாரிமுத்து. சுப : அருணாசலம். எஸ். எம். மீரான் பி. எம் ஜலால், ஏ. வேதநாயகம், செ. தமிழ்முத்து, பழனியப்பன், ராவிக். பி. திருப்பதி சாகுல்அமீது. மொன்னு, உமர், காதர், பெரியண்ணன், பாரூக், பழனி ஆகியோர்.

கூட்ட இறுதியில் இலங்கைஎங்கிலும் தமிழும் சிங்களமும் சரிசம அரசாங்க மொழியாக்கப்பட வேண்டுமென தோழர்கள். பி. எம். ஜலால். உமர், தேவராசன், ஆகியோர் சொற்பொழிவாற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### இரத்தினபுரி தி. மு. க. கிளை

இக்கிளையின் உறுப்பினர் கூட்டம் 15—10—5, மாலை 6-மணியளவில் நெடுந்தெரு 279-ம் இலக்க கட்டிட மேல் மாடியில் தோழர் சு. சுந்தரம் தலைமையில் கூடியது தலைமையுரைக்கு பின் செயலாளர் அண்ணாதாசன் கிளை வரவு — செலவு கணக்குகளை கிளையின் செயல் முறை ஆண்டு அறிக்கை முதலியவைகளை உறுப்பினர் கூட்டத்தில் படித்து காண்பித்தார் வரவு—செலவு உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது கிளையின் முன்னேற்றம் பற்றி தோழர் பெ. கதிர்வேல் பேசினார். பின் இந்த நாட்டின் அரசியல் மொழியாக தமிழையும், சிங்களத்தையும் ஆக்கப் பட வேண்டுமென ஆட்சி மன்றத்தை கேட்டு கொள்கிறது இக்கிளையின் உறுப்பினர் கூட்டம் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

### அண்ணா பகுத்தறிவு மன்றம்

கொழும்பு அண்ணா பகுத்தறிவு மன்ற முன்னைய நாள் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து பணியாற்றிய திரு எம். உமர், கே. கே. தமிழ் நாதன் ஆகியோருக்கு அவர்களது சேவையைப் பாராட்டி 16—10—55 அன்று ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. மன்றத் தலைவர் வை மு. அளகேசன் அவர்கள் தலைமை வகித்தார்.

நிர்வாகிகள் இதுவரை செய்த பணியைப் பற்றி செயலாளர் குறிப்பிட்டு பேசியபின் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டது.

பின்னர் தோழர்கள் பரமசிவன், மாதவன், எ. எம். துரைசாமி, வி. எஸ். முருகன், டி. எம். பீர்முகம்மது மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

செல்வி கமலா சுந்தரம் இயக்கப் பண் பாடியபின், செயலாளர் எம். எஸ். குமார் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

## 'வாழ்க்கை வாழ்வதற்கே'

(நாடகம்)

O

இரா. சு. தங்கப்பழம் அவர்கள் தீட்டியபுரட்சிப் பெண் நாடகத்தை நடத்தி வெற்றி கண்ட **முன்னேற்ற நாடக மன்றத்தாரின் இரண்டாவது தயாரிப்பான 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்னும் நாடகம் (தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தீட்டியது) சிறப்புற நடைபெற்றது.**

வசனத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் ஓர் சில இடங்களில் புரட்சியும் சில இடங்களில் அரசியல் கருத்துக்களையும் புகுத்தியுள்ளார்.

பொதுவாக நடிப்பைப்பற்றி குறிப்பிட்டால் அடிக்கடி வந்து சென்ற பாலையாவாக நடித்த திரு. டி. தம்பி ராஜாவின் நடிப்புதான் பிரமாதம். சிதம்பர கவுண்டராக நடித்த ஆர். கருணாகரன் அவர்கள் நடிப்பும் நன்றாகயிருந்தது. கதாநாயகனாக நடித்தவரின் நடிப்பு சில இடங்களில் மிக அளவு கடந்ததாயிருந்தது. நடிகைகளை பொறுத்தமட்டில் ஏதும் குறை சொல்வதற்கில்லை,

தி. இளங்கதிர், எஸ். சுப்பிராயன் இருவரின் கருத்துடைய பாடல்கள் ரம்மியமாக இருந்தன. இசையமைப்பும் பரவாயில்லை.

நடனமாடிய தோழியர் ரீட்டாராணி தன் நடனம் மூலம் அவையோரின் அபிமானத்தைப் பெற்றார்.

நாடகத்தை பயிற்சி செய்து வெற்றி கண்டு விட்டார் நண்பர் டி. தம்பி ராஜா!

குறைகள் இருப்பினும் சிறந்த முறையில் நடத்தி வெற்றி பெற்றனர் மன்றத்தினர்.

நாடகத்திற்கு தலைமை வகித்த இலங்கை திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் இரா. அதி மணி அவர்கள் பேசுகையில்,

இதுபோன்ற சமூக சீர்திருத்த நாடகங்கள் நாட்டில் நடமாடா விட்டால் இன்றைய திராவிடர் மக்களின் நிலை என்ன முறையிலிருக்கும், பழைய புராணங்களின் வழியில் சென்றால் என்னவாக முடியும். நம்ப முடியாத பொய்களை நம்பும்படி செய்ய எத்தனையோ விதமான கதைகள், அவைகளை நடித்துக் காட்ட பலர். இவர்களால் சமூகத்திற்கு என்ன பயன்! ஆனால் சமூக சீர்திருத்தக் கொள்கைகளை பரப்புபவர்கள் ஒருவர் உண்டென்றால் இது திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் தான் என பெருமைப்பட கூற முடியும் என்று குறிப்பிட்டார்.

முதல் காட்சிக்கு இலங்கை திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் இரா. அதி மணி அவர்களும் இரண்டாவது காட்சிக்கு முத்தமிழ் மன்றத் தலைவர் ஜே. சோமசுந்தரம் அவர்களும் தலைமை வகித்தார்கள். நாடகத்தில் முக்கிய பங்கேற்று நடித்த முத்தமிழ் மன்ற செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் எஸ். டி. ராஜா ஏ. டி. அந்தோணி பயிற்சியானர் பி. தம்பிராசா அவர்களுக்கு "இன்ப திராவிடம்" என்ற நூல் பரிசளிக்கப்பட்டது.

—"வியஸ்" இலங்கை.

### தென்பகுதி இரயில்வே மென் யூனியன்

தென்பகுதி இரயில்வேமென் யூனியன் சென்னை கிளையின் பொதுக் குழு மத்தியசங்கத்தலைவர் திரு இராகவானந்தம் அவர்கள் தலைமையில் 13-10-55 சைதையில் கூடியபோது கீழ்கண்டவர்கள் 1955-56 ஆண்டிற்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் திரு டி. நல்லப்பன், துணைத் தலைவர் தி. ம இரத்தினம், செயலாளர் கா. மா சுவாமி நாதன், துணைச்செயலாளர் மோகன் மத்திய சங்க செயற்குழு உறுப்பினர் ஒய். எஸ் சாலியா உசேன் மற்றும் 7 செயற்குழு உறுப்பினர்கள்.

### பாலக்காடு

16—10—55 மாலை 6-30 மணிக்கு பாலக்காடு சுல்த்தான்பேட்டை தி மு க. அமைப்பு கூட்டம் தோழர். எஸ் கே. சாமி தலைமையில் கூடி கீழ்க்கண்ட குழுவைத் தேர்ந்தெடுத்தது.

செயலாளர் வி. கே. சாமி து. செயலாளர் எஸ். கே. சாமி பொருளாளர். சி. வி எஸ். சுந்தரம் மற்றும் 14 செயற் குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### சென்னை 41-வது வட்டம்

18-10-55 அன்று அருணாசல ஆசாரி தெரு 13-ம் இல்லத்தில் சென்னை மாவட்ட செயலாளர் இளம்பருதி முன்னிலையில் திரு நீலநாராயணன் தலைமையில் 41-வது வட்ட தி. மு. க. கிளைக் கழகம் அமைக்கப்பட்டது அதுசமயம் கீழ்க்கண்டவர்கள் செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்

செயலாளர், புதுவை சி. எ. முகிலன் துணைச்செயலாளர், இராசமாணிக்கம், பொருளாளர் மு. வேதாசலம். மாவட்ட பிரதிநிதிகள், 1 இளவழகன், 2 இராவணன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 16 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### அணியாப்பூர்

குமரவேல் நினைவு மன்ற துவக்கம் அரசு நிலையம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 18-10-55 செவ்வாய் மாலை 4-30 மணிக்கு துவக்கப் பெற்றது. திரு முத்தியானந்தம் தலைமையில் எம். ஆறுமுகம், எம். கே. மருதை, கே. இராமசாமி ஆகிய தோழர்கள் விரிவுரையாற்றியபின் முத்தியானந்தம் வாசகசாலையைத் திறந்து வைத்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

### பம்பாய் தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

9—10—55 ஞாயிறு காலை 10 மணிக்கு கோல்டுங்கரி பணிமனையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுசமயம் துணைச்செயலாளர் தோழர் ஈ முத்தையா அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்தார். செயலாளர் எஸ். எம். பாண்டியன் அவர்கள் தலைமை வகித்தார், தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் எஸ். கணேசன், எஸ். முத்து, இரா. தஞ்சைத்துரை ஆகியோர் பேசிய பின்னர் புதிய பொருளாளர் தோழர் வி. சுப்பையா அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. பொறுப்பை ஏற்றுக்கொண்டு பொருளாளர் சிறிதுநேரம் பேசினார்.

### பிறப்பு

ப. தி. வ கலா மன்ற உறுப்பினரும் 'பலிபீடம் நோக்கி' நாடகத்தில் கஜவீரன் பாகம் ஏற்று திறம்பட நடித்தவருமான தோழர் கே. எம். பெருமானின் வாழ்க்கைத் துணைவியர் திருமதி ரத்தினம் அம்மையார் அவர்கள் தாயகத்தில் (நெல்லை கோவிலம்மாள்புரம்) 9-10-55 இரவு 8 மணிக்கு ஆண் குழந்தை பெற்றெடுத்தார்கள் தாயும், சேயும் நலம்.

### மாச்சம்பாளையம்

இவ்வூர் கிளைக் கழக உறுப்பினரும் சிறந்த ஊழியருமான தோழர் மா. வீ. ராமசாமி அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து கிளைக்கழகம அநுதாபதீர்மானம் நிறைவேற்றியது; அவர் நினைவாக கிளைகழகத்தில் ராமு நினைவ இரவு பள்ளி என்ற பள்ளியை 19—10—55 இரவி மணிக்கு துவக்கி வைக்கப் பட்டது நிகழ்ச்சியின் முதலாவதாக ந. பழனிசாமி நாட்டுப் பண்பாட ஆசிரியர் ரங்கநாதன் வந்திருந்தோரை வரவேற்று பேச தோழர் கு. மருதப்பன் கூட்டத்திற்கு தலைமை வகிக்க தோழர் ந. கிருட்டிணசாமி ராமு நினைவு இரவு பள்ளி என்ற பெயர் பலகையும் ராமுவின் புகைப்படத்தையும் திறந்துவைக்க பின் மயில்சாமி, கு. கருப்புசாமி, இரணியன் ந. மயில்சாமி ஆகியோர் ராமுவின் சிறந்த குணத்தையும் உழைப்பையும் பாராட்டிப்பேச தலைவர்முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற வந்திருந்த சிறுவர் சிறுமியருக்கு இனிப்புகள் வழங்க விழா இனிது முடிந்தது.


●

Tel: WIND. Phone : 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1




மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

ஏஜெண்டுகள் தேவை

●

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், ஆகிய மொழிகளில் ரப்பர் ஸ்டாம்புகளை தயார் செய்கிறோம். ஆர்டர்களை வாங்கி அனுப்ப ஏஜெண்டுகள் தேவை உடனே விண்ணப்பிக்கவும்.

அருணா ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ்

குடியேற்றம் : : (தென் இந்தியா)

# இடி முழங்கியது, மழையில்லை!

ச. வெ. பாண்டியன்.

O

ஜாரக் கொடுங்கோன்மையை எதிர்த்து—எப்படிப்பட்ட நன்மையை எதிர்பார்த்து சாரின் சர்வாதிகாரத்தைச் சாய்த்தனரோ அதே எதிர்பார்த்தவைகள் நடைபெருது கண்டு—பிரபுத்துவத்திற்குப் பல்லாண்டு பாடி ஏகச் சக்கரவர்த்தியாக எண்ணம் கொண்ட அந்த 'கெரன்ஸ்கி' அரசாங்கத்தையும் கிளர்ச்சி செய்து ஒழித்தனர் ரஷ்ய மக்கள்.

'கெரன்ஸ்கி' நாட்டைவிட்டு ஓடி காடுகளிலே அலைந்து கொண்டிருந்தான்! என்னுடைய எண்ணமெல்லாம் எண்ணினான். "அன்று நான் காச்சினுகளுக்கு சொற்பெருக்காற்ற வந்த போது எத்தகைய சிறப்பான முறையில்—மனம் மகிழ்ச்சி படையும் வண்ணம் வரவேற்பளித்தனர், கட்டுக்கடங்காதகூட்டம்! வாழ்த்துக்கள் விண்ணைப் பிளந்தனவே ஆனால் இன்று அதே மக்கள் லெனினின் உணவுப் பெருக்கத் திட்டத்திற்கும் சமாதானத் திட்டத்திற்கும் என்று, கூட்டங்கூட்டமாக அணிவகுத்து ஆக்கவேலைகளில் ஈடுபடுகின்றனரே! என்ன வித்தியாசம்..." என்று சிரித்துக் கிடந்தானும்!

அரசபீடத்தில் இருந்தபோது கிடைத்த வரவேற்பு—அவன் காவலன்—நம்மை ஆள்பவன் என்ற முறையில்! அந்த ஆரவாரத்தைக் கண்டு மக்கள் ஆதரவு தன் பக்கம் இருக்கிறது என்று ஆணவத்தோடு அடங்காப்பிடாரித் தனத்தில் இறங்கினான். புகழ்ந்தவர்கள்—புல்லன் என்று கூறி புதருக்குள் பதுங்கி வாழுமாறுசெய்து விட்டனர்!

*

கோஷம் விண்ணைப் பிளந்ததாம்! வாழ்க என்ற குரல் வானத்தில் எதிரொலித்துத் திரும்பிற்றும்! லட்சக் கணக்கான மக்கள் கூட்டமாம்! சிறுவரிலிருந்து பெரியோர்வரை தேனடை ஈக்கள் போல மொய்த்துக் கிடந்தனராம்—அவரைப் பார்க்க! கடும் வெயிலாம்! எனினும் பொருட்படுத்தவில்லையாம்!

ஆசிய ஜோதியே வருக! சமாதான வீரரே வருக! முடிசூடா மன்னரே வருக! இப்படி எங்கும் வளைவுகள்தென் பட்டனவாம்; மாவிலைத் தோரணங்கள்—குருத்தோலைகள் — வாழைகள் எங்கும் தெரிந்ததாம்! மாலைகள் அழகாகத் தொங்கவிடப் பட்டிருந்ததாம்! அவருக்குச் சூட்டப்பட்ட மாலைகளும், பூச்செண்டுகளும் கையிலிருந்து வீசியெறியப்பட்ட மலர்களும் மலையாகக் குவிந்தனவாம்.

'சேனுவிற்காக வாதாடும் சிற்பியே வருக' என்று செம்பியன்கோவில் கம்யூனிஸ்டுகளும் வரவேற்றனர்களாம்.

அமைக்கப்பட்ட பந்தல்களெல்லாம் எவ்வளவு அலங்காரமாக இருந்தது தெரியுமா! யாருக்கு இந்த மாதிரி உண்டு! ஏதோ நம் போன்ற சிலரும்—பந்தல் போடும் தொழிலாளர்களும் தான் பந்தல் வேலைகளைச் செய்யப் பார்த்திருக்கிறோம் — எந்தச் சம்பவங்களிலும்! நேருவுக்கு இப்படிப்பட்டவர்களால் பந்தல் அமைக்கப்பட்டது! தஞ்சை 'எக்ஸிகியூடிவ்' எஞ்சினியர் தெரியுமா? எவ்வளவு பெரிய நிபுணர்! அவர் அமைத்த பிளான் படிதான் தஞ்சாவூரில் மேடையும், அலங்காரமும் செய்யப்பட்டிருந்தன! நடராசன் தெரியுமா சேலம் முனிசிபல் 'எஞ்சினியர்' அவர் பிளான்படிதான் ஆர்ச் அமைக்கப்பட்டிருந்தது. என்று தருகிறது, சுதேசமித்திரன்! ஆளும் கட்சியினர்களல்லவா! பின் அவர்கள் ஏவலாளர்கள் செய்வதற்கென்ன!

கோட்டையில் பேசவந்ததும் மேடையை விட்டிறங்கி கூட்டத்திற்குள் பாய்ந்து விட்டாராம் நேரு! நேருவின் மெய்க்காப்பாளர் 'நேரு இங்கே வர வேண்டும்' என்று மைக்கில் வந்து பேசியும் கேட்கவில்லையாம்! கனம் சுப்பிரமணியம் அவர்தான் நமது நிதிமந்திரி மைக் முன்னால் நின்று கொண்டு கனம் நேரு அவர்கள் மேடைக்குத் திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம்! அதற்குப் பின்தான் மேடைக்குத் திரும்பினாராம்!

கவர்னர் பெருமாள் பிரகாசா திறந்த கார் கொண்டு வராதது கண்டு அவர் மீது ஆத்திரப்பட்டாராம்!

பெரம்பூர் தொழிற்சாலையைச் சுற்றிலும் ஏன் இந்தச் சுவர்! இது எனக்குப் பிடிக்கவில்லை என்றார்.

நேரு பட்டனைத் தட்டியதும் ரயில் பெட்டி ஓட, மேலே இருந்த விமான மூலம் புஷ்பமாரி நேருவின் மேல்விழ நேரு குஷியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தனது மேல் இருந்த மாலையை யெல்லாம் கழட்டி மக்கள் வெள்ளத்தின் மீது எறிந்தார்! அதுவும் பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதுதான் வீசினார்.

அப்படி மாலைகளை வீசிவரும்போது அவருடைய பவுண்டன் பேனாவையும் மாலையோடு சேர்த்து வீசிவிட்டாராம்! அதை ஒரு குழந்தையை வைத்திருக்க அதைக் கண்டு பிடித்து கொண்டுவந்து சேர்க்கப்பட்டது!

'ஜெய்ஹிந்த்' என்று மும்முறை கோஷமிடுமாறு செய்தார்!

காமராசர் தோள்மீது கை போட்டுக் கொண்டு சென்றார்!

இப்படி ஒன்று கூட விடாமல் எடுத்துக் காட்டின—தேசிய எடுகள் எல்லாம்! புன்முறுவல் பாரீர்! ஆனந்தப் பார்வை பாரீர்! ஆசையைப் பாரீர்! என்றெல்லாம் விளம்பரப் படுத்திக் கொண்டு வந்தன! இதோடு இன்னும் ஒரு முக்கிய செய்தியையும் வெளியிடத் தவறவில்லை!

தங்கச் செங்கோல்!

தங்கமோதிரம்

அரசாங்க ஸ்தூபி பொறிக்கப்பட்ட பொன்னாடை!

விலையுயர்ந்த 'லுங்கி' ஆடை!

இவைகளும் பரிசாக அளிக்கப்பட்டதாம் நேருவிற்கு !

அம்மம்மா! யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்! பிரம்மாண்டமான வரவேற்பை கடல் போன்ற மக்கட்கூட்டத்தை எங்கு காண முடியும்; ஆகா! நேருவின் புகழே புகழ் என்று நாட்டு மக்கள் பேசலாம்! அதைவிட காங்கிரஸ் கட்சியினர் ஆனந்தம் கொள்ளலாம்.

நேருவின் ஸ்டைலில் எப்படி! வார்த்தை உச்சரிப்பு அழகாக இருக்கிறது. பார்த்தாயா! 'ரைம்' எப்படி! எவ்வளவு இளமையுள்ளவர்போல் காணப்படுகிறார்! ஒன்று கூட்டம்! வரவேற்பு என்றெல்லாம் பேசிக் கிடக்கும் பொது மக்களையும்—காங்கிரஸ் கட்சியினரையும் அவரது பேச்சில் கவனம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

அள்ளி வழங்கினீர்கள் வரவேற்பை பாரத ரத்தினமே எனப்பெருமையோடு அழைத்தீர்கள்! சமாதான வீரரே ஏழையின் தோழரே! என்று பார்த்துப் பேசினீர்கள்! அப்படிப் பட்டவர்கள் உங்கள் கஷ்டத்திற்கு, உங்களைப் பிடித்தாட்டும் வறுமைக்கு என்ன வழி சொல்லியிருக்கிறார் என்று யோசித்துப் பாருங்கள்,

அவர் பேச்சிலே இடி, முழக்கத்தை கேட்டிருப்பீர்கள். அந்த இடி, மழையைக் கொடுக்கும் இடியா இல்லை மண்டையை உடைக்கும் இடியா என்பதை கவனியுங்கள்!

சுதந்திரம் அடைந்துள்ள நம்முன் இரண்டு முக்கிய பிரச்னைகள் இருக்கின்றன முதலாவது ஏழ்மையையும், வேலையின்மையும் ஒழித்துக்கட்டி சோஷலிச சமுதாயம் அமைப்பதாகும், இரண்டாவது உலகமும், உலக மக்களும் சமாதானத்தில் வாழ்வதற்காக உழைப்பதாகும் என்று திருச்சி கூட்டத்திலே பேசியிருக்கிறார்,

பேசியிருப்பவர் பண்டித நேரு—பாரதத்தின் தலைமை அமைச்சர் என்பதை கவனப்படுத்திக் கொள்ளுங்கள்! இவர் பிரதம மந்திரி ஆகி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. 1947–லிருந்து 1955 வரை பிரதமராக இருக்கிறார். அவர் ஆட்சியால் இன்றும் ஏழ்மை ஒழிக்கப்படவில்லை! இந்த லட்சணத்தில் சோஷலிஸம் வேறு பேசுகிறார். அன்றுதான் இல்லை, இன்றுவது கையில் ஏழ்மையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க என்ன திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். இப்படிக் கேட்டால் வரும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை காண்பிக்கிறார்! 120 லக்ஷம் மக்களுக்கு வேலை! கனத் தொழிற்சாலைகள் இதோ! ஏழ்மை வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது எனக் காட்டுகிறார்.

உருக்குலைந்த 1-வது திட்டமே அரைகுறையில் முடிந்தபோது, இரண்டாவது திட்டம் சரியாகவாவது உருவேறுமா என்பதே சந்தேகம்! ஏனெனில் 'பாரதரத்ன' 'பத்ம பூஷணங்'களின் திறமை அப்படியிருக்கிறது! சரி சொன்னபடி அத்தனை பேருக்கும் வேலையைக் கொடுக்க முடியுமோ!

இதற்குப் பதில் நாம் சொல்லுவதைவிட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி காங்கிரசுக் குழு தயாரித்துள்ள அறிக்கையே போதும். '110 லட்சம் முதல் 120 லட்சம் பேர்களுக்கு புதிதாக வேலைகள் அளிக்க வேண்டுமென்ற குறிக்கோளை அடைய உறுதி செய்யும் முறையில் திட்டத்தின் அளவு இருக்க வேண்டும். ஆகவே இந்தக் குறிக்கோளை அடைய தற்போது முதலீடு செய்யப்போவதாக தெரிகிற 4300 கோடி ரூபாய் போதுமானதாக இருக்காதென்றும், ஆகவே அதிகரிக்க வேண்டும் என்று மேலும் திட்ட நகலைப் பரிசீலனை செய்ததில் தெரிய வருகிறது.

—[5—9—55 தமிழ் நாடு]

ஏழ்மை, வேலையின்மை போகுமா என்பதில் மேலும் விளக்கம் தேவையில்லை என்றுதான் நினைக்கிறோம். அப்படியே நிறைவேறுவதாக இருந்தாலும் அது வடக்கேதான் இருக்குமே தவிர தெற்கே பழைய நிலைமைதான் இருக்கும். ருக்கலே வடக்கே! பிலாய வடக்கே! இதோ தோன்றப் போகிற மூன்ருவது கன இயந்திர தொழிற்சாலையும் வடக்கே!

தொழிலாளி—முதலாளி வேற்றுமை மிகுந்து முதலாளி கொள்ளையடிக்கவும், ஏழை வாடவும் ஆன நிலை இருக்கும் போது "சோஷலிச சமுதாயம் அமைப்பதாகும் என்கிறார்! சோஷலிஸம் என்ற புனிதமான தத்துவத்தைக் காட்டி—அதைப் பலவாறு சின்னபின்னப்படுத்தி கொண்டு சோஷலிசம் அமைப்பதுதான் வேலை என்கிறார்.

2-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிதர்சனமாக 600 கோடி ரூபாய் வெளிநாட்டுப் பண முதலைகள் நேரடி முதலீடு செய்யும் வசதி வேறு செய்யப்பட்டிருக்கிறது.

தேசிய மயமாக்க மாட்டோம்! அப்படியே ஆக்கினாலும் நட்டஈடு தருகிறோம். என்ற அபயம் அளிக்கப்படுகிறது—சுரண்டல் வர்க்கத்தினருக்கு!

திட்டத்தில் தனியார் முயற்சிக்கு தாராளமான வசதி உண்டு அரசாங்கம் அதைத் தடுக்காது. இத்துறையில் தனியார் துறைக்கும், அரசாங்கத் துறைக்கும், போட்டி கிடையாது. இப்படிக் கல்கத்தாவிலே சமீபத்திலே பேசியிருக்கிறார் டி. டி. கே; டாடா, பிர்லா, அமெரிக்கா, பிரிட்டன் வியாபாரிகள்போன்றவர்கள் லாபத்தை அபகரித்துச் செல்லும் கழுகுகளுக்கு வழிகாட்டிவிட்டு சமூகத்திலே ஒருசிலரை பணக்காரர்களாக — முதலாளித்துவங்களாக இருக்க அனுமதி கொடுத்துவிட்டு சோஷலிசம்—சோஷலிசமாதிரி என்று வேறு தைரியமாகப் பேசுகிறார்கள்! வேடிக்கை!

சாதிவெறி சமூகத்திற்கு ஒருபெரும் தொந்தரவு மட்டுமல்ல சாபக்கேடும் ஆகும்"—நேருவின் கடலூர் பேச்சு!

மதம் தனி நபர் பற்றிய சொந்த விஷயம்! இது மற்றவர் விஷயத்தில் குறுக்கிடக் கூடாது-சேலத்துப் பேச்சு

அதோ ஒரு சம்பவம் வடநாட்டில் நடந்திருக்கிறது பாருங்கள்! ஜெயின் திகம்பர கோவிலுக்குள் அரிஜனங்கள் நுழையக் கூடாது என்று 4000 பெண்கள் கோயில்முன் சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்களாம்!

மான்சிங் என்ற பிரபல வடநாட்டுக் கொள்ளைக் கூட்டத் தலைவன் போலீசாரால் துப்பாக்கியில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டபின் பொது மக்கள் பார்வைக்கு வைத்தனராம்—சர்க்கார்! அவனைப் பார்க்க வந்த மக்கள் அவன் கழுத்தில் துளசி மாலை இருந்ததைக் கண்டு அவனைக் கொன்றது பாவம் என்று சர்க்கார் மேல் சாடுகிறார்களாம்!

கோவணாண்டி விழாக்களின் திருக்கோலம் அடிக்கடி நடந்தவாறே இருக்கிறது வடக்கே! நாட்டின் தலைவர் ராஜேந்திரரிலிருந்து நேரு வரை அவ்விழாவிலே பங்கேற்றுக் கொள்கின்றனர்.

ஹிந்தியை தென்னாட்டின் மீது திணிக்க இந்திய சர்க்கார் முயற்சிப்பதாக நினைப்பது தவறு! ஹிந்தி கற்பதற்கு எளிதாக இருப்பதால் இந்திய அரசாங்கத்தின் உத்தியோக பாஷையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர அது தமிழ் முதலிய இதர தேசிய மொழிகளைவிட உயர்வானதென்று அர்த்தமல்ல! என்று இந்தி பற்றிப் பேசியிருக்கிறார்.

இந்தி உயர்ந்த மொழி அல்ல! அதுவும் தமிழைவிடச் சிறந்ததல்ல! ஒப்புக் கொள்கிறார் நேரு! எனினும் அதுதான் தேசிய பாஷையாம்! ஏனெனில் அது கற்க எளிதாக இருக்கிறதாம்! கற்க எளிதாக இருக்கிறது என்பதற்காக ஒரு மொழியை ஒரு சவ மொழியை அரசாங்க பாஷையாக ஆக்கவேண்டுமாம்! ஆனால் இலக்கணம் நிறைந்த—இலக்கி

8-ம் பக்கம்

பஞ்சாப் கட்டுரை

# நான் கண்ட சந்த்ராம் : என்ன செய்தார்?

பஞ்சாப் பெரியார் சந்த்ராம், நந்தலைவர் பெரியாரைப் போன்றே, சாதி ஒழிப்பிற்காகவும், தீண்டாமைப் பீடை ஒழியவும், சீர்திருத்தங் காணவும், அரும்பாடு பட்டிருக்கிறார், என்பதனை முன்னைய கட்டுரைகளில் கண்டோம்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், காங்கிரசில் இருந்தபோது, தீண்டாமை ஒழிவிற்காக வைக்கத்தில் அரிய சத்தியாகிரகம் செய்து வெற்றி பெற்றார்.

பஞ்சாப் பெரியார் சந்த்ராம் அவர்களும் 1918-ஆம் ஆண்டிலேயே 'கிருஷி ஆசிரமம்' என்ற ஒரு ஸ்தாபனத்தைத் துவக்கி நடைமுறையில் தீண்டாமை, சாதி பேதம், இந்து—முஸ்லிம் வேற்றுமை ஆகியப் பேய்களை விரட்டி யடித்து' வெற்றி வாகை சூடப் பெற்றார்.

சந்த்ராமினது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைச் செவியுறும்போது, அவர் சாதி ஒழிப்பிற்கென்றே பிறந்தவர் என்ற முடிவிற்குத்தான் நம்மை வரச் செய்கிறது. அத்துணை அரும்பாடுபட்டு அரிய பெரிய சாதனைகளைச் செய்து, இன்று உடல் தளர்ந்து காணப்படுகிறார் எனினும் உள்ளம் தளர்ந்தாரில்லை. உரங்கொண்ட உள்ளம் உறுதி இழந்து விடாமல் இன்றும் சாதி ஒழிப்பிற்காக, ஹோஷியார்பூரில் ஜாட்-பட்-தோடக் மண்டல் என்ற சாதி ஒழிப்புக் கழகத்தை இயங்குறச் செய்து வருகிறார். உயிர் உடலைவிட்டகன்றால்தான் அத்தகைய சீர்திருத்தத் தலைவர்களுக்கு ஓய்வு, என்ற உண்மை அவர்பால் மெய்மையாகி வருகிறது.

வாழ்க்கை ஆரம்பத்தில் அவருக்குற்ற ஒரு அவமான நிகழ்ச்சியே அவருக்குத் தன் மானத்தை ஊட்டி. சாதிச் சனியனோடு போரிட்டு வெற்றி காண உந்திற்று.

அந்நிகழ்ச்சி என்ன? லாகூர் அரசினர் கல்லூரியில் 1908—1909—இல் பி. ஏ. வகுப்பு மாணவனாகக் கல்வி பயின்றார். அக்கல்லூரியை அணைத்தாற் போல் உணவு விடுதி ஒன்று நடத்தப் பட்டு வந்தது. அவ்விடுதி எல்லாருக்கும் பொது என்பதுதான் விதி. ஆனால் அவ்விடுதியில் முதலில் இடம் பற்றிக் கொண்டவர்கள் பெரும்பாலோர் ஐதீகச் சவுண்டிப் பார்ப்பனர்களேயாவர். சந்த்ராம் சாதி வழிப்படி ஒரு சூத்திரர். நம் பக்கத்து, குயவர், கொல்லர், தச்சர், கன்னார், போன்ற உடலுழைப்பையே தொழிலாகக் கொண்ட வகுப்பைச்சார்ந்தவர். ஆகவே அவரை அறைக்கு வெளியே தனிமையில் சாப்பிட வேண்டுமென்று, அகம்பாவங் கொண்ட ஆரியப்பதர்கள், சண்டித்தனம் செய்தார்கள். அவமானமுற்றுப் போனார் வாடினார், வெதும்பினார். ஆனாலும் அஞ்சக் கூடியவரா சந்த்ராம்? வெகுண்டெழுந்தார். வாதத்தில் உடும்பு பிடிவாதக்காரர் அவர். பார்ப்பனர்களின் சாதிச் செருக்கின் போக்கைக்கடுமையாக எதிர்த்து நின்று வாதாடினார். போராடினார். கல்லூரி அதிகாரிகள் தலையீடும் ஆவர்பால் ஒன்றுஞ் செய்து விட முடியவில்லை. நியாயம் சந்த்ராம் பக்கம். தமது உரிமையை நிலைநாட்ட விடுதியினுள்ளே பார்ப்பனர்கள் சாப்பிடுமிடத்திலேயேதான் சாப்பிடுவேன் என்று வாதித்தார். அதை அப்படியே சாதித்துக் காட்டினார். வாழ்க்கையில், முதல் ஜாதிப்போர் வெற்றியைக் கண்டார்.

வென்றார்; எனினும் வேதனைக் கொண்டார் சந்த்ராம். இன்றளவும் அவ்வேதனையை மறந்தாரில்லை. அச்சம்பவம் இன்றும் அவர் மனதை உறுத்திக் கொண்டிருக்கிறது என உருக்கமாகக் கூறிட்டார் என்னிடம் நேரில். அது ஒன்றே அவரைச்சாகும் வரையில் சாதிக் கொடுமைகளைச் சாடுவதில் உறுதி கொள்ள ஊக்கமளித்து வருகிறது என்றுங் கூறினார்.

அக்கல்லூரி நிகச்சிக்குப் பிறகு அவர் தம் வாழ்க்கையைச் சாதி ஒழிப்பிற்கெனவே அர்ப்பணித்தவரானார்.

சாதிக் கட்டுப் பாட்டை முறித்தெறிய முனைந்த பெரியார்கள், ஞானிகள், பலப் பலர்.

அவர்களுள் தலையாயக் கூறக்கூடியவர் புத்தர் பெருமான் எனலாம்.

சாதி ஒழிப்புப் போரில் அவர்கள் வென்றார்களா என்றால் "இல்லை" என்றுதான் கூறவேண்டிவருகிறது. ஆனால் முன்

## 'திருவேடம்'

பிருந்தப் பிடிதளர்ந்து, ஒரு பெருமாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மையை எவரே மறுக்க வல்லார்?

புத்த பெருமானாலேயே நீக்கி ஒழிக்க முடியாமற் போன சாதியைக் கல்லியெறியும் பணியை சந்த்ராம் அவர்களும் தொடர்ந்து மேற்கொண்டார். அவ்வகையான சந்த்ராம் அவர்கள், பெரியார் ஈ. வே. ரா, வைப் போன்று. ஓர் நவீன புத்தராகக் காட்சியளிக்கிறார்.

அத்தகையச் சாதி ஒழிப்பு வள்ளலின் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டுவது சாதி யொழிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரின் கடமையல்லவோ?

## பிறப்பு:

பஞ்சாபில், மண்டி என்னும் மலைப் பகுதியைச் சேர்ந்த **மாலினிதேவி** அம்மையாருக்கும், மத்திய ஆசியா வட்டாரத்தில் வாணிபத் தொழில் நடாத்திய **ஸ்ரீ ராம்தாஸ் கோகல்** என்பாருக்கும், இல்வாழ்க்கையின் பரிசில்களாக, எட்டு குழந்தைகள் பிறந்தன அவை முறையே, (1) இராமதாஸ், (2) இலக்குமணதாஸ், (3) நந்தாலால், **(4) சந்த்ராம்**, (5) நாதுராம், (6) துளசிராம், (7) தௌலத்ராம், (8) திரௌபதி தேவி அம்மையார்.

இவ்வெண்மருள் முதல் மூவரும், கடைசி அம்மையாரும், மறைந்து விட்டார்கள்.

சந்த்ராமும் அவருக்குப் பின் தோன்றிய மூன்று தம்பிமார்களும்தான் இனிதே வாழ்ந்து வருகிறார்கள்.

சந்த்ராம், அவரது பெற்றோர்களுக்கு நான்காவது மகனாக 1886-ஆம் ஆண்டில் (பஞ்சாப் ஆண்டு : விக்ரமி 1943, பால்கன் மாதம் 3-ம் நாள்) ஹோஷியார்பூர் வட்டாரத்தைச் சார்ந்த புரானிபாஸீ என்னும் குக்கிராமத்தில் பிறந்தார்.

எனது முந்திய கட்டுரைகளில் **ஹேத்ராம், ஹேத்ராம்** என்று கூறிவந்தேனல்லவா? அவர், மேலே கூறிய எண்மருள் இரண்டாவதாகத் தோன்றிய **இலக்குமணதாஸ்** என்பாரின் மகனாவார் என்று இங்கே நினைவூட்டிக் கொள்கிறேன்.

மேற்கூறிய எண்மரின் பெயர்களையும் அவர்களது பெற்றோர்களது பெயர்களையும் காணும்போது, சந்த்ராம் குடும்பத்தவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தப் பஞ்சாபியர்கள் என்பதாக அறிகிறோம். பஞ்சாபில் சீக்கியர்களும், முஸ்லிம்களும் மலிந்து வாழ்கிறார்கள்.

முஸ்லிம்கள் மலிவினால்தான், பஞ்சாப் இரண்டாகப் பிரிந்து மேற்கு பஞ்சாப் (பாகிஸ்தான்) ஆகவும், கிழக்கு பஞ்சாப் (இந்துஸ்தான்) ஆகவும் உருபெற்றது.

இப்பிரிவினால், சந்த்ராம் வாழ்க்கையும் அவரது சாதி ஒழிப்பு இயக்கமாகிய ஜாத்—பாத்—தோடக் மண்டலும், பெரிதும் பாதிக்கப் பட்டு விட்டன. இப்பிரிவினையே அவரை, ஒரு அகதியாக, லாகூரிலிந்து துறத்தி, பிறந்தகமாகிய புரானீபாஸியைப் புகலிடமாகக் கொள்ளச் செய்தது. அவர் லாகூரில் ஆற்றிய பணிகளெல்லாம் இன வெறி மத வெறி கொண்ட பாகிஸ்தானிகளால் பாழ் படுத்தப்பட்டு விட்டன. அந்த இக்கட்டான நிகழ்ச்சியை என்னிடம் சொல்லிச் சொல்லி கண்ணீர் உகுத்து, என் கண்ணீரையும் ஊற்றெடுக்கச் செய்தார்.

அவரது உடல், பொருள், ஆவி அத்தனையும் ஜாத் பாத்—தோடக் மண்டல். அத்தகு மண்டல் சீர்குலைவப்படுமாயின் அவரது உள்ளம் எவ்வளவு துடிக்கும், துயர் உறும் என்பதை நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

பாவம்! அவர் துயர், துடைப்பது யார்?

"எனது இந்தக் துயரைத் துடைப்பவர்கள் இன்று உங்களைப் போன்ற உணர்வால் உந்தப்பட்ட நண்பர்கள்தான்"—என்று என்னை அணைத்துப் பிடித்துக்குழைந்தார்.

"தாங்கள் ஏன் தென் கோடியிலிருந்து என்னைக் காண வரவேண்டும்? நான் இதுகாறும் ஆற்றிய சாதி ஒழிப்புப் பணிதானே எனவே தங்களது வருகையை எனது பணிக்கு, ஈடு காண ஒண்ணுப் பரிசிலாகக் கொண்டு மகிழ்ச்சிக் கடலாடுகிறேன்! எனக்கு மகிழ்ச்சி யூட்டும் தங்கள் வரவு நல்வரவு ஆகுக!"—என்று உருகி என்னை வரவேற்று உபசரித்தார்.

அடுத்து அங்கு பஞ்சாப்பில் மலிந்திருப்பவர்கள் சீக்கியர்கள்; மாஸ்டர் தாராசிங் தலைமையில் அவர்களெல்லாம் சீக்கியத் தனி நாடு கேட்கிறார்கள், கிளர்ச்சி உரம்பெற்றும் வருகிறது.

இவ்வாறெல்லாம் மக்கள் ஒற்றுமையின்றி பிரியச் செய்வது இந்து மதத்தின் செருக்கே என்பது எனது முடிபு,'—என்று கூறுகிறார் சந்த்ராம், அவரது உள்ளம் இணைந்து வாழவே விழைகிறது என்பதை சீக்கியர் தனி நாட்டைப் பற்றி பல கேள்விகள் எழுப்பி விடை கூறக் கேட்டு உணர்ந்தேன்.

பஞ்சாபிலுள்ள இந்துக்கள் ஒருமுகமாக பஞ்சாப் மொழிவழி மாகாண பிரிவினையை ஏற்கவேயில்லை என்று அவர் கூறியது எனக்கு வியப்பாக யிருந்தது.

[பிற தொடர்ந்து]

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

**மறைமலை அடிகள், திரு. வி. க. நினைவுக் கூட்டம்.**

16—10—55 மாலை 4 மணிக்கு ஆம்பூர் திருவள்ளுவர் கழக நிலையத்தில் ஆம்பூர் முனிசிபல் கமிஷனர் திரு கே. பீர்முகமது தலைமையில் கூட்டம் நடைபெற்றது தலைவர் திருக்குறளைக் குறித்து அரியதொரு சொற்பொழிவு ஆற்றியபின் திருக்குறளும் மறைமலை அடிகளும் திரு. வி. காவும் என்னும் பொருளைப்பற்றி திருச்சி டி. கே. சீனிவாசன் பாலகவி ஆ. மா. சிவஞானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செயலாளர் ந. கணேசன் நன்றி நவில இனிது முடிவுற்றது.

# கேள்வி? பதில்.

**எம். குலசேகரன், தஞ்சை**

**கே : சென்னை முதல் மந்திரி காமராச நாடார், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங் கரை ஆகிய தமிழ் தாலுக்காக்களை தமிழ் நாட்டுடன் சேர கடைசிவரை போராடுவாரா?**

*ப : போராடுவதாகவே உறுதி கூறி வருகிறார்; ஒருக்கால் மற்ற பிரச்னைகளில் டெல்லி தேவதைகளுக்கு குனிந்து கொடுப்பதைப்போல இப்பிரச்னையிலும் காமராசர் அவர்களோ, அல்லது மற்றவர்களோ தமிழ் நாட்டுக்குத் துரோகம் விளைவித்தால் வரும் பொதுத் தேர்தலில் சரியான புத்திபுகட்ட உங்களைப்போன்ற தோழர்கள் பொதுமக்களின் சக்தியைத் திரட்டுங்கள்.*

ஃ

**டி. எம். ராஜன், கோவை.**

**கே : பொதுத் தேர்தலில் திராவிட கழகம் காங்கிரசை ஆதரிக்கும் என்று பெரியார் ஈரோட்டிலே பேசி விட்டாரே—அப்படியானால் கண்ணீர்த்துளி கட்சியாகிய உங்கள் கட்சி என்ன ஆகும்?**

*ப : பெரியார் அவ்விதம் பேசியதாகப் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. அது உண்மையாவென்று தெரியவில்லை. ஏனெனில் அவரது சொந்த பத்திரிகையே அவரின் செய்திகளை ஒழுங்காகப் பிரசுரிப்பதில்லையென்று அடிக்கடி பெரியார் அவர்கள் மனவேதனைப் படுகிறார். எனவே மற்ற தின இதழ்கள் அவரைப்பற்றி வெளியிடும் செய்திகளை நாம் நம்புவதற்கில்லை. எனினும் தங்களின் கூற்றுப்படியே பார்த்தாலும், கடந்த ஆறு ஆண்டுகளாக கண்ணீர்த்துளிகள் சாதித்துள்ள காரியங்கள் மகத்தானது என்பதை நாடறியும். நாட்டை ஆளும் அமைச்சர்களும் அறிவர்.*

*எனவே கண்ணீர்த்துளிகளின் சக்தியிருக்கின்றதே - நேர்மைக்கும் நீதிக்கும் மாறாக எப்பேர்ப்பட்டவர்கள் கூட்டுசேர்ந்து குளறுபடி செய்தாலும் அதனை எதிர்த்தே தீரும் என்பதை உணர வேண்டுகிறேன்.*

ஃ

**கே. ராமநாதன், வட சென்னை**

**கே. : சென்னைப் பிரதம மந்திரி காமராச நாடார் டெல்லிக்கு போகும் போது எப்போதாவது இந்தியப் பிரதம மந்திரி நேருஜி விமான கூடத்திற்கு வந்து வரவேற்றதுண்டா?**

*ப : தோழரே—நமது சென்னை முதல்வருக்கு சென்னைப் பிரதமர் என்று பட்டமில்லை. சென்னை முதலமைச்சர் என்றுதான் குறிப்பிடவேண்டும். மத்திய ஆட்சியில் முதல்வர்தான் பிரதம மந்திரி என அழைக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது.*

*நிற்க, சென்னை முதலமைச்சர் காமராஜர், அவர்களை—இதுவரை நேருஜியோ பந்த்ஜியோ அல்லது மத்ய ஆட்சிபீடத்தின் எந்த "ஜீ"க்களும் விமான நிலையத்திற்கு வந்து வரவேற்றதில்லை.*

*இதற்குக்காரணம் நமது மாநிலம் இந்தியப் பேரரசின் அதிகாரத்திற்குட் பட்ட "பில்கலெக்டர்" போன்ற நிலையிலுள்ள ஆட்சி முறையில் இருப்பதாகும் எனவேதான் டெல்லி எஜமானர்கள் தங்களின் சப் ஏஜெண்டுகளை வரவேற்க வருவதில்லை.*

*ஆனால் நமது மாநிலத்தைவிட எல்லா வகையிலும் மூன்றாந்தரம் நான்காம் தரத்திலுள்ள சின்னஞ் சிறு நாடுகளின் பிரதமர்கள் டெல்லிக்கு வருவார்களேயானால் நேருஜி மட்டுமல்ல — ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்ஜி கூட விமான கூடத்திற்கோ அல்லது ரயில்வே நிலையத்திற்கோ வந்து வரவேற்பது வழக்கமாயிருக்கிறது.*

*காரணம் — அவைகள் உண்மையான சுதந்திரம் பெற்றுள்ள நாடுகள் என்பதால். ஆனால் நமது மாநில ஆட்சி முறையும் அதை ஆளுவதாகக் கூறிக்கொள்ளும் அமைச்சர்களின் நிலையும் "பொய்க்கால் குதிரை" மாடலில் இருந்து வருகிறது. இந்நிலையில் டெல்லியிலுள்ள பெரிய தேவதைகள் குட்டி தேவதைகளை மதிக்குமா? தி. மு. கழகம் தனி உரிமைக் கோருவதின் அடிப்படைக் காரணங்களில் இதுவும் ஒன்றாகும், இந்த அரசியல் தன்மானம் ஆளவந்தார்களின் புத்தியில் ஏறுவதில்லையே — தப்பித்தவறி புத்தியில் பட்டாலும் அவர்களின் பதவி ஆசை நமது மாநிலத்தின் அரசியல் தன் மானத்தை பறி கொடுக்கச் செய்கிறதே என் செய்வது?*

ஃ

**ஆர். என். கோபால், அமைந்தகரை.**

**கே: ஐக்கிய நாடுகள் சபையில் சென்ற பத்து வருஷங்களாக பொதுச்சபையில் இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவர்களாய் இருந்தவர்களின் பெயர்களை அறிவிக்க முடியுமா?**

*ப : 1945-ம் ஆண்டு ஐ. நா. சபை துவக்கப்பட்டதிலிருந்து இதுவரை அதன் பொதுச்சபையில் இந்தியப்பிரதிநிதிகளின் தலைவர்களாக-சர் ஆற்காடு இராமசாமி. தோழியர் விஜயலட்சுமிபண்டிட், வி.கே. கிருஷ்ண மேனன், மற்றும் காலஞ்சென்ற சர்.பி.என் ராவ். சர். கோபாலசாமி அய்யங்கார் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.*

ஃ

**எ. ஜி. சவுந்தரன், அவிசாவெல்ல இலங்கை**

**கே: (1) இந்திய சப் யூனிட்டு தலைவர்கள், அடிக்கடி பாண்டிச்சேரிக்கு மருத்துவரைத் தேடிச்செல்வது பணப்பட மருந்து வாங்கவா அல்லது உடல்நோய்க்கு மருந்து வாங்கவா?**

*ப : பரந்த கண்ணோட்டத்தில் ஏற்படும் பள்ளத்தை நிரப்பி விடுவதற்காக என்றுதான் விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.*

**கே :(2) திராவிட நாடு கிடைத்தபிறகாவது வெளிநாடுகளில் இன்னல்படும் தமிழர்களின் துயர் தீர்க்கப்படுமா?**

*ப : கண்டிப்பாகத் தீர்க்கப்படும்.*

ஃ

**டி. எஸ். லிங்கம், மயிலை.**

**கே : டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் எ. லட்சுமணசாமி, ஜி. டி. நாயுடு ஜே.சிவ சண்முகம் பிள்ளை, அறிஞர் அண்ணாதுரை காமராசர், எஸ். வி. வி. அந்தோணிபிள்ளை, கஜபதிநாயகர், எம்.எல்.சி. டாக்டர் அழகப்ப செட்டியார், முதலியவர்களைக்கொண்டு தமிழ் நாட்டு மந்திரிசபை அமைத்தால் எப்படியிருக்கும்?**

*ப : இப்போதுள்ள இந்திய அரசியல் சட்டப்படி-மேற்கண்ட மந்திரிசபை அமைந்தால் நீர் எண்ணுகிறபடி பயனுள்ளதாயிருக்க முடியாது.*

*நம்நாடு தனி அரசியல் உரிமையுடன் இயங்குவதென்ற வாய்ப்பு ஏற்படின் நீர் குறிப்பிட்டுள்ள மந்திரிகளின் பட்டியலில் சிறு குறைபாடுகளிருப்பினும் பொதுவாக சிறப்புடையதாகவே இயங்க முடியும்.*

ஃ

**நா. ஞானசேகரன், திருச்சி டவுன்.**

**கே : அடுத்தபொதுத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுமா?**

*ப : இதற்குப் பதில் தெரிய, காந்தி ஜோசியருக்கு எழுதுங்கள்.*

ஃ

**கே வீரப்பன் வேலூர்.**

**கே: திராவிட நாடு ஆட்சியில் எத்தனைக் கடவுள்கள் இருக்கும்?**

*ப : எத்தனையிருக்கும், எத்தனை கட்டலேறும் என்பதை இப்போதே திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் இப்போது கடவுள்—மதம். புராணம் என்ற பேரால் பக்தர்கள் கடவுள்களுக்கு, கொடுத்து வரும் தொல்லைகள் — அதாவது கண்மூடி பழக்க வழக்கங்கள், கூடுமான வரை மண்மூடச் செய்யப்படும்.*

ஃ

**எஸ். விசுவலிங்கம், தியாகராயநகர்.**

**கே : திரு கே. பி. சுந்தராம்பாள், எம். எஸ் சுப்புலட்சுமி ஆகியவர்களில் சுதந்திரப்போரில் பாடுபட்டது யார்?**

*ப : கொடுமுடி கோகிலம், சுந்தராம்பாள்தான், சுதந்திரப் போரில் பணியாற்றியது மட்டுமல்ல, தேசிய முகாமினர் ஆட்சி பீடத்தில் அமர ஓட்டுகள் சேகரித்து தரும் பிரச்சாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.*

ஃ

**வி. எம். என். மாறன், கடலூர்**

**கே. ஜவர்லால், நேரு சர்க்காரே இந்தியாவை இன்னும் 10-வருஷ காலம் ஆண்டால் தமிழர்களின் நிலை எப்படியாகும்.**

*ப : நேரு சர்க்கார் தங்களின் பத்தாம் பசலிப் போக்கிலிருந்து திருந்தும் அளவுக்கு புத்தி கற்பிப்பார்கள், தமிழர்கள்.*

ஃ

**டி. எம். செழியன், புதுப்பேட்டை.**

**கே : மாநில புனரமைப்புக் குழுவினரின் தீர்ப்பை எதிர்த்து இந்தியாவின் எல்லா பாகங்களிலும் பலத்த எதிர்ப்பு- ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது இது போதாதென்று அந்த கமிட்டியிலுள்ள மூவரையும் ராஜ்யபுனரமைப்புக் கமிஷன் தீர்ப்பை அமுலுக்குக்கொண்டுவர இந்திய சர்க்காருக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறதே இது என்ன நியாயம்?**

*ப : குதிரைச் செத்ததுமல்லாமல் குழி தோண்ட மூன்றுபணம் என்பார்களே அது போன்ற கதைதான் இதுவும். நேரு பண்டிதர் ஆட்சியின் ஜனநாயகம் அந்த அளவுக்கு நீளுகிறது.*

---

தோழர்களே !

## திராவிடன்

*சந்தாதாராகச் சேர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.*

---

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1